பக்கங்கள்: 16

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 ஆவணி 30 திங்கட்கிழமை 16.09.2019 கதிர் 315

### இது ரகசியம் அல்ல!

ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளிக் கட்சிகளுடன் நேற்று முன்தினம் இரவு நிதி அமைச்சர் மங்கள சமரவீரவின் இல்லத்தில் நடைபெற்ற பேச்சுகள் பெரு வெற்றி என்ற மாதிரி ஐ.தே.கட்சியின் துணைத் தலைவர் சஜித் பிரேமதாஸா ஊடகங்

பக்கம் 02

# தமிழ் மக்களுக்கு சஜித் வைத்துள்ள தீர்வு என்ன?

## கூட்டமைப்பின் கேள்வியால் அமைச்சர்கள் அதிர்ச்சி

கொழும்பு, செப். 16

ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் விடயம் குறித்தும் தேர்தலுக்கான ஆதரவைப் பெறுவதற்காகவும் அமைச்சர் சஜித் பிரேமதாஸ தரப்பின் அமைச்சர்கள் நேற்றுத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடத்திய பேச்சு வெற்றியளிக்கவில்லை.

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் இல்லத்தில் நடந்த இந்தச் சந்திப்பில் சம்பந்தனுடன், சுமந்திரன் எம்.பி. கூட்டமைப்பின் சார்பில் கலந்து கொண்டார்.

பக்கம் 03

## தியாகி திலீபனின் நினைவேந்தல் யாழ்ப்பாணத்தில் நேற்று ஆரம்பம்



யாழ்ப்பாணம், செப். 16

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நீர் கூட அருந்தாமல் 12 நாள்கள் உண்ணாவிரதம் இருந்து உயிர் துறந்த தியாக

பக்கம் 03

# யாழ்ப்பாணத்தில் இன்று எழுக தமிழ்!

## அனைவரையும் அணி திரள அழைப்பு



(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செப். 16

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வை வலியுறுத்தியும், தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைச் சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தும் வகையிலும் யாழ்ப்பாணத்தில் இன்று எழுக தமிழ் பேரணி நடத்தப்படவுள்ளது.

பக்கம் 03

## காணாமற்போனோர் பணியகத்தை அகற்றக் கோரி தொடர் போராட்டம்



(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செப். 16

காணாமற்போனோர் அலுவலகத்தின் (Office on Missing Persons-OMP)

பக்கம் 03

## கிழக்கிலும் ஹர்த்தால்

மட்டக்களப்பு, செப். 16

யாழ்ப்பாணத்தில் இன்று இடம்பெறவுள்ள 'எழுக தமிழ்' எழுச்சிப் பேரணிக்கு கிழக்கு மக்கள் தங்களது முழு ஆதரவைத் தெரிவிக்கும் முகமாகவும் பேரணியை வலுவூட்டும் முகமாகவும்

பக்கம் 03

## வடக்கு ரயில் சேவை பாதிப்பு

கொழும்பு, செப். 16

யாழ்ப்பாணத்திலிருந்து பெலியத்தை நோக்கி வந்த ரயில் மஹாவயில் தடம் புரண்டதால் வட பகுதிக்கான ரயில் சேவை பாதிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து ரயில்வே பொறியாளர்கள் சீரமைப்புப் பணிகளில் ஈடுபட்டனர். (ஐ)

## குடும்பத் தலைவர் மீது பொலிஸார் தாக்குதல்!

### பிரதிப் பொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாடு

வவுனியா, செப். 16


வவுனியாவில் இளம் குடும்பத் தலைவர் மீது பொலிஸார் கண்மூடித்தனமாகத் தாக்குதல் மேற்கொண்ட சம்பவம் தொடர்பில் வன்னிப் பிரதி பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட இளம் குடும்பத்

பக்கம் 03

## சிவில் அமைப்புக்கள் பிரதமருடன் சந்திப்பு

### வேட்பாளர் விவகாரத்தை இறுதிப்படுத்த வலியுறுத்து



கொழும்பு, செப். 16

சிவில் அமைப்புக்கள் மற்றும் தொழிற்சங்கக் கூட்டமைப்பினர் நேற்றுக் காலை பிரதமர்

பக்கம் 03

## பெண்ணின் சங்கிலி அபகரித்த சிப்பாய் சுன்னாகத்தில் கைது!



யாழ்ப்பாணம், செப். 16

சுன்னாகம் பொலிஸ் பிரிவில் வீடொன்றுக்குள் புகுந்து பெண் ஒருவரிடம் சங்கிலி அபகரித்துத் தப்பிக்க முயன்ற இராணுவ உத்தியோகத்தர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவத்தில் பணியாற்றும்

பக்கம் 03

# திலீபனின் நினைவுத் தூபியை திறந்தமையால் சுடப்பட்டேன்

## கூறுகின்றார் சி.வி.கே. சிவஞானம்

நல்லூரில் உள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபியை துணிந்து திறந்து வைத்தமையால் நான் சுடப்பட்டு, இந்தியாவுக்குப் பாதுகாப்புக் கைதியாகக் கொண்டு செல்லப்பட்டேன். மாநகர சபை ஆணையாளர் பதவியை இழந்தேன். இப்போது தாங்கள்தான் புலி வாரிசு எனக் கூறிக்கொண்டு திரிபவர்கள் அப்போது இந்த மண்ணில் பிறந்திருக்கக்கூட மாட்டார்கள். வரலாறுகள் மழுங்கடிக்கப்படக் கூடாது என வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிகையில்–

வடக்கு மாகாண சபை ஆட்சியில் இருந்தபோதே நல்லூரில் உள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபியை எல்லையிட்டு பராமரிக்கவேண்டும் என மாகாண உள்ளூராட்சி அமைச்சர் என்ற வகையில் முன்னாள் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனுக்கு கடிதம் ஒன்றை எழுதியிருந்தேன். அந்தக் கடிதத்தில் திலீபனின் தூபி உள்ள இடத்தில் பத்து அடி பகுதியை எல்லையிட்டு பாதுகாப்பு சுற்றுவேலியை அமைக்குமாறு கோரியிருந்தேன்.

அனால் முன்னாள் முதலமைச்சர் எனது கோரிக்கையை நிராகரித்து நினைவுத் தூபி தவிர்ந்த நான்கு அடிப் பகுதியை சுற்றி எல்லை வேலி அமையுங்கள். நினைவுத் தூபியில் எவ்வித முன்னேற்றங்களையோ அபிவிருத்திகளையோ செய்வதை தடுக்கும் வகையில் பதில் கடிதம் ஒன்றை எனக்கு எழுதியிருந்தார். ஏன் அவ்வாறு பதில் எழுதினார் என்று எனக்கு விளங்கவில்லை.

1988 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 28 ஆம் திகதி நல்லூரில் உள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபி மீள புனரமைக்கப்பட்டு என்னால் திறந்து வைக்கப்பட்டது. அவ்வாறு திறந்து வைக்கப்பட்ட நான்கு நாட்களில் எனது அலுவகலத்தில் வைத்து என் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதனால் இந்திய அமைதி காக்கும் படையினர் பாதுகாப்புக் கைதியாக என்னை இந்தியாவுக்குக் கொண்டு சென்று விட்டனர். பின்னர் சில காலம் கழித்து இலங்கை வந்தபோதும் என்பது ஆணையாளர் பதவியில்– அரச உத்தியோகத்தில் என்னால் பணியாற்ற முடியவில்லை. எனது வேலையை இழந்தேன். அப்போது எனக்கு வயது 50. இதனால் ஓய்வூதியத்தைப் பெற முயற்சிகளை எடுத்தேன். இதனால் எனது குடும்பத்தைக் கூட கொண்டு நடத்துவதில் மிகுந்த சிரமப்பட்டேன்.

தியாகதீபம் திலீபன் உயிருடன் இருந்த காலத்தில் கூட நான் அவருடன் நேரடியாகப் பேசியிருக்கிறேன். திலீபனின் வரலாறுகள், தியாகங்கள் இடம்பெற்று 30 வருடங்களாகிவிட்டன. இப்போது தாங்கள்தான் புலி வாரிசு என கூறிக்கொண்டு திரிபவர்கள் அப்போது இந்த மண்ணில் பிறந்திருக்கமாட்டார்கள் அல்லது அவர்களுக்கு திலீபனை யார் என்று கூட தெரிந்திருக்குமோ தெரியவில்லை.

திலீபனின் தூபியை அன்றைய காலத்திலேயே துணிந்து நின்று திறந்து வைத்தவன் நான். அதனால் 60 வயதில் ஓய்வு பெற வேண்டிய நான் ஐம்பது வயதிலேயே ஓய்வுபெறவேண்டிய சூழல் கூட ஏற்பட்டது. இவ்வாறு ஆரம்ப கால வரலாற்றுடன் நேரடியாக தொடர்புபட்டவன் என்ற அடிப்படையில் வரலாறுகள் மறைக்கப்படக் கூடாது என்பதாலேயே யாழ்ப்பாணம் மாநகர சபை இதனைப் பொறுப்பேற்க வேண்டும் எனக் கோரினேன் –என்றார். (ஐ–07)

---

# வட்டுக்கோட்டைப் பொலிஸார் அடாவடி நடுவீதியில் குடும்பத் தலைவரை தாக்கினர்

மோட்டார் சைக்கிளில் சேலை சிக்குண்டுதால் மனைவி விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்த நிலையில் அவரை ஏற்றிச் சென்ற கணவரை நடுவீதியில் வைத்து வட்டுக்கோட்டை பொலிஸார் தாக்கியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் வட்டுக்கோட்டை சங்கரத்தை பகுதியில் இடம்பெற்றது. வட்டுக்கோட்டையிலிருந்து மனைவியை ஏற்றிக்கொண்டு இளம் குடும்பத்தலைவர் சித்தன்கேணிக்குப் பயணித்துள்ளார். சங்கரத்தைப் பகுதியில் மோட்டார் சைக்கிள் சில்லுக்குள் சேலை சிக்குண்டு மனைவி விபத்துக்குள்ளாகியுள்ளார்.

தலையில் படுகாயமடைந்த மனைவியை அம்புலன்ஸ் வண்டியில் தெல்லிப்பளை அனுப்பி வைத்த குடும்பத் தலைவர் தானும் வைத்தியசாலைக்குச் செல்ல முற்பட்டுள்ளார்.

வீதியில் பயணித்த தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் உள்பட பொலிஸ் உத்தியோகத்தர் இருவர் விபத்துச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதாகத் தெரிவித்துள்ளனர்.

அதனால் விபத்துக்குள்ளான குடும்பத்தலைவரின் சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பொலிஸ் நிலையம் எடுத்துச் செல்லத் தருமாறு கேட்டுள்ளனர்.

தான் மனைவியைப் பார்க்க வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டும் என்பதால், சாரதி அனுமதிப்பத்திரத்தை வைத்திருக்க அனுமதிக்குமாறு கேட்டுள்ளார். எனினும் பொலிஸார் அதற்கு மறுத்தததுடன், குடும்பத்தலைவருக்கு கை விலங்கிட்டு கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

பொலிஸாரின் இந்தச் செயலைக் கண்டவர்கள், குடும்பத்தலைவரைத் தாக்கவேண்டாம் என்று கேட்டதுடன், அவரிடமிருந்த சாரதி அனுமதிப்பத்திரத்தை வாங்கிப் பொலிஸாரிடம் வழங்கியுள்ளனர்.

குடும்பத்தலைவரின் சாரதி அனுமதிப்பத்திரத்தையும் மோட்டார் சைக்கிளையும் பொலிஸ் நிலையத்துக்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரும் எடுத்துச் சென்றனர்.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரால் வீடு கொடுத்து தங்க வைக்கப்பட்டுள்ள சிங்கள பொலிஸ் உத்தியோகத்தரே இந்த அடாவடியில் ஈடுபட்டார் என்று அங்கு நின்றவர்களால் விசனம் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிலர் கையூட்டுப் பெற்றுக்கொள்வதாகவும் மறுப்பவர்களை வயல் வெளிக்கு அழைத்துச் சென்று அச்சுறுத்துவதாகவும் குற்றச்சாட்டுக்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

---

# சம்மாந்துறையில் வெடிபொருட்கள் மீட்பு

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சம்புமடுப் பிரதேசத்தில் வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

நேற்றுப் பிற்பகல் சம்மாந்துறை பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றை அடுத்து அந்தப் பிரதேசத்தில் கல்குவாரி அருகே பாவனையற்ற நிலையில் இருந்த காணியில் புதைக்கப்பட்ட நிலையில் அமோனியா ஜெலக்னைட் குச்சிகள் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. இந்த வெடிபொருட்கள் தொடர்பாகச் சம்மாந்துறைப் பொலிஸார் தொடர்ந்தும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

---

# இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்குத் தெரிவித்திருக்கின்றார். ஆனால் உண்மை நிலை அதுவல்ல என்கின்றன விடயமறிந்த சுயாதீன வட்டாரங்கள்.

இந்தச் சந்திப்பில் பங்காளிக் கட்சிகளின் சார்பில் அமைச்சர்கள் சம்பிக்க ரணவக்க, ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன், மனோ கணேசன், திகாம்பரம் ஆகியோர் பங்குபற்றினர். இவர்களில் ரவூப் ஹக்கீம் மட்டுமே கொஞ்சம் உஷாராக சஜித்துக்கு ஆதரவு கொடுத்தாராம். ஏனையோர், நீங்கள் கட்சியின் வேட்பாளர் நியமனத்தைப்பெற்று வாருங்கள், நாங்கள் முழு ஆதரவு தருகிறோம் என்ற பாணியில்தான் பதில் கூறினார்களாம்.

இதே சமயம், சஜித் தரப்பு பிரதிநிதிகளான அமைச்சர் மங்கள சமரவீரவும் மலிக் சமரவிக்கிரமவும், சஜித்–ரணில் தரப்புகளுக்கு இடையில் அனுசரணையாளராகப் பங்குபற்றி வரும் அமைச்சர் ராஜித சேனாரத்னவையும் கூட்டிக் கொண்டு நேற்று மதியம் 11 மணியளவில் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தனின் கொழும்பு இல்லத்துக்குச் சென்றனர். அங்கு சம்பந்தனுடன் சுமந்திரனும் இருந்தார். இரு தரப்பு பேச்சு விரிவாக நடைபெற்றது.

*“தமிழர் தரப்பை இனியும் ஏமாற்ற முடியாது. யார் வேட்பாளர் என்பதை உங்கள் கட்சி தீர்மானிக்கட்டும். அப்படித் தீர்மானிப்பவர் தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காண்பார் என்பது தொடர்பில் திட்டவட்டமான முறையில், தெளிவானதும், வெளிப்படையானதும், சந்தேகத்துக்கு இடமற்றதுமான விதத்தில் உறுதி தர வேண்டும். இனியும் மேம்போக்கான வாக்குறுதிகளை நம்புவதற்குத் தமிழர்கள் தயாரில்லை.*

*“இரண்டு தடவைகளுக்கு மேல் சஜித் பிரேமதாஸாவுடன் நேரில் பேசி விட்டோம். அவர் ஒரு தெளிவான பதிவைத் தரவேயில்லை.*

*“தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு இனியும் தயார்படுத்தல்கள், பேச்சு நடத்தல்கள், கலந்தாய்வுகள், உரையாடல்கள் என்று காலத்தை இழுத்தடிக்கத் தேவையில்லை. நீண்ட காலத்தைச் செலவிட்டு உரிய ஆவணங்கள், அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு விட்டன. அதிலிருந்து விடயங்களை நகர்த்தி தீர்வைக் கொண்டு வருவதற்கு மிகக் குறுகிய காலம் போதும். என்ன அடிப்படையில் குறுகிய காலத்தில் தீர்வைத் தருவீர்கள் என்பதை உங்கள் தரப்பு வேட்பாளர், வெளிப்படையாகத் தெளிவுபடுத்தி, அதை நிறைவேற்றுவதற்கான உறுதிப்படுத்தல்களையும் தெரிவிக்க வேண்டும். அப்படித் தெரிவித்தால் நாங்கள் ஆதரவு வழங்குவது குறித்துப் பரிசீலிக்கலாம்.”* – என்றார் சம்பந்தன்.

அதுமட்டுமல்ல. இன்னொரு முக்கிய விடயத்தையும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளருடன்தான் நாங்கள் பேச வேண்டும் என்பதில்லை. பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ, ஜே.வி.பி. வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்கா போன்றோருடனும் நாங்கள் பேசுவோம். எங்கள் மக்களின் அபிலாகைகளை நிறைவு செய்யும் உறுதியான ஏற்பாட்டுக்கு யார் இணங்குகின்றனரோ அவர்களுடன் சேர்ந்து இயங்குவது குறித்துச் சிந்திப்போம்.” – என்று ஒரு ஷொட்’ வைக்கவும் சம்பந்தன் தவறவில்லை.

ஐ.தே.கட்சியை மட்டுமல்ல, தேவைப்பட்டால் அதற்கு மாற்றான தரப்புகளை ஆதரிப்பது பற்றியும் சிந்திப்போம் என்ற செய்தியை மிகத் தெளிவாக மங்கள – மலிக் – ராஜித அணிக்கு உரைத்தார் சம்பந்தன்.

சஜித்துடன் பேசி விட்டு தெளிவான பதிலுடன் வருவதாக மேற்படி அணி கூறிவிட்டுப் புறப்பட்டது. இந்த மூவர் அணியில் மங்கள – மலிக் இருவரும் சஜித்திற்காக அதிகம் பரிந்து பேசினர். ராஜித அப்படிப் பேசவில்லை. கூட்டமைப்புத்தரப்பு நியாயங்களுக்குப் பக்கப்பாட்டுப் பாடுபவராக அவர் இருந்தார்.

இதற்கிடையில் –

கோட்டாபய தரப்பில் செயற்படும் புத்திஜீவி ஒருவரை நேற்றுச் சந்தித்தேன். அவர் ஒரு கருத்துக் கூறினார். அதனை அப்படியே வாசகர்களுக்குத் தருகிறேன்:–

*“இன்றைய நிலையில் ஐ.தே.கவை விட்டு விட்டு கோட்டாவுடன் தமிழர் தரப்புப் பேசுவது நல்லது. வெல்லும் தரப்புடன் பேசுவது தான் எப்போதும் பயன்தரக் கூடியது. அதுவும் தமிழ்க் கூட்டமைப்பின் ஆதரவுடன் கோட்டா களத்தில் நிற்பாராயின் அவரின் வெற்றி நூறு வீதம் உறுதி.*

*“சுமந்திரன் இரண்டு விடயங்கள் குறித்து பிரஸ்தாபித்திருக்கின்றார். ஒன்று – தமிழரின் தேசியப் பிரச்சினைக்கான தீர்வு. மற்றது – யுத்த காலத்தில் இடம் பெற்ற விடயங்களுக்குப் பரிகாரமும் நீதியும்.*

*“முதல் விடயத்தைப் பொறுத்தவரை ஐ.தே.க. தரப்பினால் எதுவும் பேச முடியும். ஆனால் தீர்வு ஒன்றை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த முடியாது. தமிழர் தரப்பு, மஹிந்த – கோட்டா தரப்புடன் நியாயமாகப் பேசுமானால் உச்ச அதிகாரப் பகிர்வைப் பெற முடியும் என நான் நம்புகிறேன்.*

*“அடுத்த விடயம் – யுத்த காலச் சம்பவங்கள். இதில் இரண்டு அம்சங்கள் உள்ளன. ஒன்று – தமிழர் தரப்பு திரும்பத் திரும்பக் கூறும் யுத்தக் குற்றங்களுக்கு நீதி செய்தல். மற்றையது யுத்தத்தினால் ஏற்பட்ட விளைவுகளுக்குப் பரிகாரம் காண்பது.*

*“இதில் யுத்தக் குற்ற விடயங்கள் தொடர்பில் கோட்டா – மஹிந்த தரப்புடன் நீங்கள் எதுவும் பேசவும் முடியாது. ஊடாடி எதுவும் செய்யவும் முடியாது. மறுபுறத்தில் ஐ.தே.க. தரப்பில் ஜனாதிபதியாக ஒருவர் வருவாராயின் அவருடன் தேவையானால் இது குறித்து நீங்கள் – தமிழர்கள் – பேச முடியும். ஆனால் எதுவும் அடைய முடியாது. இலங்கை ஜனாதிபதி எவரும் இது விடயத்தில் உங்களுடன் நிற்கப் போவதில்லை; நிற்கவும் மாட்டார்கள். அதுதான் யதார்த்தம்.*

*“ஆனால் யுத்தத்தினால் ஏற்பட்ட மற்றைய பாதிப்புகளுக்கு நியாயமான நிவாரணம் – பரிகாரம் – பெறுவதற்கு கோட்டா – மஹிந்த சோடிதான் உங்களுக்கு (தமிழர்களுக்கு) மிகப் பொருத்தமானது என நான் நினைக்கிறேன்.*

*“இராணுவம் நிலை கொண்டுள்ள காணிகளை விடுவித்தல், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை அகற்றுதல், தண்டிக்கப்பட்ட கைதிகள் உட்பட முழு அரசியல் கைதிகளையும் ஒரேயடியாக விடுவித்தல், காணாமலாக்கப்பட்டோருக்காக மிக உச்சப்பட்ச இழப்பீடுகளைப் பெறுதல் போன்ற விவகாரங்களில் கோட்டா – மஹிந்த இணையுடன் பேசி நீங்கள் உறுதிமொழி பெற்றால், நிச்சயம் மிகக் குறுகிய காலத்தில் அவற்றை நீங்கள் செயலில் சாதித்துக் காட்ட முடியும் என நான் நினைக்கிறேன்.*

*“ஆகையினால் இனிமேலும், உணர்ச்சி அரசியலின் அடிப்படையில் சிந்திப்பதை விடுத்து, யதார்த்த அரசியலைப் பற்றி சிந்தியுங்கள். அதன்வழி நடவுங்கள்!”* – என்று ஆங்கிலத்தில் எனக்கு ஒரு குட்டி லெக்சர்’ வைத்தார் அவர்.

மக்களினதும் நமது தலைவர்களினதும் சிந்தனைக்கு இந்தத் தகவல்கள்.

- மின்னல் -

# தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் 6 வாகனங்கள் மோதியதால் விபத்து

கொழும்பு, செப். 16

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் கஹத்துட்டுவ பகுதியில் 6 வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்தில் 2 பேர் காயமடைந்து ஹோமாகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் கொழும்பு நோக்கிப் பயணிக்கும் பாதையில் எவ்வித வாகன நெரிசலும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, சீரற்றவானிலை நிலவுவதால் அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்கும் வாகனங்களை மிகவும் அவதானமாக பயணிக்குமாறு, வீதி அபிவிருத்தி அதிகார சபை வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஐ)





## தமிழ் மக்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, மலிக் சமரவிக்கிரம, மங்கள சமரவீர ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இனியும் நாங்கள் ஏமாறுவதற்குத் தயாரில்லை. தமிழரின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வைத் தெளிவாகச் சொல்லுவோர் பற்றியே எங்களின் கவனம் இருக்கிறது. அது ரணிலோ சஜித்தோ என்பதைப் பற்றி எங்களுக்குக் கவலையில்லை. ஏற்கனவே சஜித்துடன் நாங்கள் பேசினோம். ஆனால் தமிழர் பிரச்சினையில் அவரிடம் இருக்கும் தீர்வு என்ன என்பது தெளிவில்லை. தமிழருக்குத் தீர்வைத் தரக்கூடிய எந்தத் தரப்புடனும் அடுத்த கட்டப் பேச்சுக்கு நாம் தயார். அப்படியில்லாமல் நாங்கள் வெறுமனே பேசுவதில் அர்த்தமில்லை என்று இந்தச் சந்திப்பில் சம்பந்தன் எடுத்துக் கூறினார் என அறியமுடிந்தது.

நேற்றைய இந்தச் சந்திப்பில் அமைச்சர் சஜித் பிரேமதாஸ கலந்து கொள்ளவில்லை.

சஜித்துக்குக் கூட்டமைப்பின் ஆதரவு தேவையென்று அமைச்சர் மங்கள சமரவீர நீண்ட நேரம் வாதப்பிரதிவாதங்களை முன்வைத்த அதேசமயம் கூட்டமைப்பின் கோரிக்கையில் நியாயம் உள்ளதாக அமைச்சர் ராஜித குறிப்பிட்டார் எனக் கூறப்படுகின்றது. (ஐ)

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாண பிராந்தியப் பணியகத்தை அகற்றுவரையான தொடர் போராட்டத்தைக் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நேற்று நண்பகல் ஆரம்பித்தனர்.

கல்வியங்காடுப் பகுதியில் அமைந்துள்ள காணாமற்போனோர் அலுவலகத்தின் யாழ்ப்பாண பிராந்தியப் பணியகத்துக்கு முன்பாக இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபிக்கு முன்பாக நினைவேந்தல் நிகழ்த்திய காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், அங்கிருந்து காணாமற்போனோர் அலுவலகத்தின் யாழ்ப்பாண பிராந்தியப் பணியகத்துக்குச் சென்று இந்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

காணாமற்போனோர் அலுவலகத்தின் யாழ்ப்பாண பிராந்திய பணியகத்தைத் திறப்பதற்குக் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் எதிர்ப்புத் தெரிவித்தனர். அதனையும் மீறி மிகவும் இரகசியமாக அதிகாலை வேளை அந்தப் பணியகம் கடந்த மாத இறுதியில் திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிலையில் அந்தப் பணியகத்தை அகற்றுமாறு கோரி காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தொடர் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். (ஐ-07)

## பெண்ணின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்தவரே நேற்று ஞாயிறுக்கிழமை கைது செய்யப்பட்டார். அவரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சுன்னாகம், மானிப்பாய் மற்றும் அச்சுவேலிப் பொலிஸ் பிரிவுகளில் அண்மைக்கால இடம்பெறும் வழிப்பறிக் கொள்ளைச் சம்பவங்களுடன் இராணுவத்தில் பணியாற்றும் மூவர் சம்பந்தப்பட்டுள்ளனர் எனப் பரவலாகப் பேசப்பட்டுவந்த நிலையில் நேற்று ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகம் பொலிஸார் வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அதன்போது வீடொன்றுக்குள் புகுந்து பெண் ஒருவரை மிரட்டிச் சங்கிலி அறுத்துத் தப்பிக்க முயன்ற ஒருவர் கைது செய்யப்பட்டார். மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர் அபகரித்தது கவரிங் சங்கிலி. எனினும் சந்தேகநபர் வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவரா என்பது தொடர்பில் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த அவர் இராணுவத்தில் பணியாற்றி வருகின்றார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-07)

## கிழக்கிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கு முழுவதிலும் பூரண கதவடைப்பை மேற்கொள்ளுமாறு கிழக்கு மக்களிடம் தமிழ் மக்கள் பேரவையின் கிழக்குக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது

தமிழ் மக்கள் பேரவையின் கிழக்குக் குழு 'எழுக தமிழ்' எழுச்சிப் பேரணிக்கு ஆதரவு தெரிவித்து கிழக்கில் பூரண ஹர்த்தாலுக்கு அழைப்புவிடுத்து ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை மாநாடு ஜெனிவாவில் ஆரம்பித்துள்ள இந்த நேரத்தில், தங்களுக்கான நீதியை பெற்றுத்தருவதில் சர்வதேசத்திற்கும் பாரிய பங்குள்ளது என்பதினை சர்வதேசத்துக்கு இடித்துரைக்கும் வகையில் தமிழ் மக்களின் முக்கிய ஆறு கோசங்களை முன்வைத்து யாழ் மண்ணில் நாளை திங்கட்கிழமை 'எழுக தமிழ்' எழுச்சிப் பேரணியை தமிழ் மக்கள் பேரவை ஏற்பாடு செய்துள்ளது.

சிங்கள பௌத்த மயமாக்கல் நிறுத்தப்படல் வேண்டும், சர்வதேச போர்க்குற்ற விசாரணை நடத்தப்படல் வேண்டும், தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படல் வேண்டும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் விசாரணை நடாத்தப்படல் வேண்டும், வடக்கு கிழக்கில் இராணுவ மயமாக்கல் நிறுத்தப்படல் வேண்டும், இடம்பெயர்ந்து அல்லல்படும் மக்கள் அனைவரும் அவர்களது சொந்த நிலங்களில் குடியமர்த்தப்படல் வேண்டும் என்பனவே அக்கோசங்களாகும்

தமிழ் மக்கள் பேரவையின் கிழக்குக்குழு வடக்கு கிழக்கு தழுவியதாக தமிழர் தாயகமெங்கும் எழுக தமிழுக்கான ஆதரவு பல்வேறு தளங்களில் இருந்தும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவ் ஆதரவுத்தளத்தினை ஒருங்கிணைத்து எழுக தமிழை பேரெழுச்சியுடன் முன்னெடுக்க ஏதுவாக வடக்கு - கிழக்கு தழுவியதான பூரண கதவடைப்புக்கு தமிழ் மக்கள் பேரவை அழைப்பு விடுத்துள்ளது.

அத்தருணத்திலே 'எழுக தமிழ்' எழுச்சிப் பேரணிக்கு கிழக்கு மக்கள் தங்களது முழு ஆதரவினை தெரிவிக்கும்முகமாகவும் பேரணியை வலுவூட்டும்முகமாகவும் இன்று கிழக்கு முழுவதிலும் பூரண கதவடைப்பை மேற்கொள்ளுமாறு தமிழ் மக்கள் பேரவையின் கிழக்குக் குழு கிழக்கு மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது - என்றுள்ளது. (ஐ)

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரனை இணைத் தலைவராகக் கொண்ட, தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் இந்த எழுக தமிழ் பேரணி நடைபெறவுள்ளது.

அரசியல் தீர்வு மற்றும் தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை விரும்பும் தமிழ் மக்களின் வலிமையைக் காண்பிக்கும் வகையில் இந்தப் பேரணி அமையும் என்று, தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவரான க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இந்த எழுக தமிழ் பேரணியில் 35 இற்கு மேற்பட்ட அமைப்புகள் மற்றும் கட்சிகள் பங்கேற்பதாகவும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெறவுள்ள எழுக தமிழ் பேரணியில் பங்கேற்க, வவுனியா, அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார் ஆகிய இடங்களில் இருந்து பொதுமக்களை ஏற்றி வருவதற்காக 35 இற்கும் அதிகமான பஸ்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்றும், 15 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் இதில் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்ப்பதாகவும் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தமிழர் தாயகத்தில் சிங்களக் குடியேற்றங்களை நிறுத்து, இலங்கை போர்க்குற்றவாளிகளை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்து, எல்லா அரசியல் கைதிகளையும் விடுதலை செய், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக பக்கச்சார்பற்ற சர்வதேச விசாரணையை நடத்து, தமிழ்ப் பகுதிகளில் இராணுவ மயமாக்கலை நிறுத்து, போரினால் இடம்பெயர்ந்த அனைவரையும் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்து ஆகிய ஆறு பிரதான கோரிக்கைகளை முன்வைத்து இந்த எழுக தமிழ் பேரணி நடத்தப்படவுள்ளது.

இன்று காலை நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றிலில் இருந்தும், யாழ். பல்கலைக்கழக வாயிலில் இருந்தும், ஆரம்பிக்கும் பேரணி யாழ். கோட்டை அருகேயுள்ள முற்றவெளித் திடலில் முடிவடையும்.

அங்கு எழுக தமிழ் பிரகடனம் வாசிக்கப்பட்டு நிறைவேற்றப்படும். அத்துடன் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பிரமுகர்கள் உரையாற்றவுள்ளனர்.

இன்றைய நடைபெறவுள்ள எழுக தமிழ் பேரணிக்கு, ஆசிரியர் சங்கம், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம், உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளும் இந்தப் பேரணிக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

அதேவேளை, தமிழ் மக்கள் பேரவையுடன் இணைந்து செயற்படும் தமிழ் மக்கள் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகிய கட்சிகள் இந்தப் பேரணி ஒழுங்கமைப்பில் ஈடுபட்டுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோவும் ஆதரவு தெரிவித்துள்ளது. ஜனநாயகப் போராளிகள் கட்சியும் எழுக தமிழ் பேரணிக்கு ஆதரவு அளிப்பதாகக் கூறியுள்ளது.

இதனிடையே எழுக தமிழ் பேரணியில் தமது கட்சியின் பெயரோ, சின்னமோ பயன்படுத்தப்படாது என்றும், தமிழ் மக்களின் நலன்களை முன்னிறுத்தியே இந்தப் பேரணி நடத்தப்படுவதாகவும் தெரிவித்துள்ள க.வி.விக்னேஸ்வரன் அரசியல் சார்பின்றி அனைவரும் இதில் பங்கேற்குமாறும் அழைப்பு விடுத்துள்ளார்.

எழுக தமிழ் பேரணியை முன்னிட்டு வடக்கு, கிழக்கில் இன்று முழு அடைப்புப் போராட்டத்தை நடத்தி, இந்நிகழ்வை வலுப்படுத்துமாறு தமிழ் மக்கள் பேரவை கோரியிருக்கிறது. (ஐ-07)

## குடும்பத் தலைவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவரால் நேற்று இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா, கூமாங்குளம் மதுபான நிலையம் அருகில் நேற்று முன்தினம் மதியம் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது.

இளம் குடும்பத்தலைவர் மோட்டார் சைக்கிளில் வீதியால் பயணித்துள்ளார். எதிர்த் திசையில் பொலிஸார் வாகனத்தில் வந்துள்ளனர்.

பொலிஸாரின் வாகனம் செல்வதற்கு இடம்விட்ட பின்னர் குடும்பத்தலைவர் அப்பகுதியில் இருந்த மதுபானச்சாலைக்குள் சென்றுள்ளார். இதன்போது அவரைப் பின்தொடர்ந்து சென்ற பொலிஸார் மதுபான நிலையத்துக்குள் வைத்து கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

நீதிமன்ற பிடியாணை இருப்பதாகத் தெரிவித்து குடும்பத் தலைவரைப் பொலிஸார் வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

பொலிஸ் நிலையத்திற்குச் சென்ற குடும்பத் தலைவரின் மனைவி தனது கணவரை ஏன் கைது செய்தீர்கள் என விசாரித்த போது, பிடியாணை இல்லை, சந்தேகத்தில் பிடித்தோம், விடுவிப்போம் எனத் தெரிவித்தனர்.

இருப்பினும் மதுபோதையில் குழப்பம் விளைவித்தார் என குடும்பத் தலைவர் மீது பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்துள்ளதுடன், நீண்ட நேரம் தடுத்து வைத்திருந்துவிட்டு நேற்று முன்தினம் இரவு விடுவித்தனர்.

இதேவேளை, மதுபான நிலையத்தில் வைத்து குடும்பத்தலைவர் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தும் காட்சி அங்கு பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. கமராவின் பதிவாகியுள்ளது. இதனை ஆதாரமாகக் கொண்டு வன்னி பிரதி பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில் பொலிஸாருக்கு எதிராக பாதிக்கப்பட்ட குடும்பத்தலைவர் முறைப்பாடு செய்துள்ளார். (ஐ)

## சிவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணில் விக்கிரமசிங்கவை அலரி மாளிகையில் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் விவகாரம் இழுபறியில் உள்ள நிலையில் அது தொடர்பில் ஒரு இறுதி முடிவுக்கு விரைவில் வருமாறு இங்குப் பிரதமரிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தம்பர அமில தேரர், விக்கிரமபாகு கருணாரத்தன , ஜெகான் பெரேரா, பேராசிரியர் சந்திரகுப்தா உட்பட்ட பலர் இதில் கலந்து கொண்டனர். (ஐ)

## தியாகி திலீபனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீபம் திலீபனின் 32 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கட்சி பேதங்களைக் கடந்து மிகவும் உணர்வெழுச்சியுடன் நேற்று ஆரம்பமாகியது.

நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபன் நினைவாலயத்தில், தியாகி திலீபனின் உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்ட நேரமான காலை 9.45 மணிக்கு பொதுச் சுடரேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. (விரிவான செய்தி 11ஆம் பக்கத்தில்)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## கடைசி நேரத்தில் கட்டவிழும் புதிய அரசியல் காய் நகர்த்தல்கள்

இறக்கும் சமயத்தில் – கடைசி நேரத்தில் – பிறக்கும் அறிவை 'சுடலை ஞானம்' என்பார்கள்.

தென்னிலங்கை அரசியல்வாதிகள் சிலருக்கும், சமூகச் செயற்பாட்டாளர்களுக்கும் அத்தகைய சுடலை ஞானம் பிறந்திருக்கின்றமையால் தெற்கில் புதிய – திடீர் – அவசர – அரசியல் நகர்வுகள் புதிதாகக் கட்டவிழத் தொடங்கியுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இயலுமானால் இந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் –

அல்லது இந்தத் ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு –

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்கும் முயற்சியில் மும்முரமாக ஈடுபட முக்கிய தரப்புகள் இணங்கிக் காய்நகர்த்தல்களை ஆரம்பித்திருக்கின்றன என்று நம்பகரமாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளை எடுக்கும் அதிகாரம் நேற்று முதல் தேர்தல் ஆணையகத்துக்கு வந்து விட்டது. அதை இனி யாரும் தடுக்க முடியாது. ஏறத்தாழ இரண்டு மாத காலத்துக்குள் அந்தத் தேர்தல் நடைபெற வேண்டும். அதற்கான பணிகளில் தேர்தல் ஆணையம் ஈடுபட்டு, அந்த நடவடிக்கைகள் ஒருபுறம் தொடர, மறுபுறத்தில் அந்தத் தேர்தல் வாக்களிப்புக்கு முன்னர், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறைமையை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்ய முடியாதா என்ற முயற்சி முதலாவதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

ஏற்கனவே, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கான அரசமைப்புக்கான 20 ஆவது திருத்தப் பிரேரணை ஜே.வி.பியினால் நாடாளுமன்றுக்குச் சமர்ப்பிக்கப்பட்டு, முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது. அதை நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் அரசு தரப்புப் பிரேரணையாக மாற்றி, அமைச்சரவை அங்கீகாரத்துடன் அதை உடனே நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பது. நாடாளுமன்றில் அதற்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிட்டுமானால், அது தொடர்பான சர்வஜன வாக்கெடுப்புக்கு ஜனாதிபதி உடனே அறிவித்தல் கொடுத்து அடுத்த ஆறு வாரத்துக்குள் அத் தேர்தலை நடத்துவது. அதில் மக்கள் அங்கீகாரம் கிடைத்தால், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமை அந்தத் தேர்தல் முடிவின் மீது ஜனாதிபதி ஒப்பமிடுவதுடன் செயலிழக்கும். அப்படி நடக்குமானால், அதுவரை அறிவிக்கப்பட்டு முன்னெடுக்கப்படும் தற்போதைய ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகளும் அத்துடன் செயலிழக்கும்.

இதில் இரண்டு பிரச்சினைகள் உள்ளன.

ஒன்று இவ்வளவு விடயங்களையும் அடுத்த இரண்டு மாதங்களுக்குள் – தற்போதைய ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்புக்கு முன்னர் முடித்தாக வேண்டும். அதற்குக் காலம் மிக நெருக்கமாக – மட்டுமட்டாக – உள்ளது. அதனால் தான் இந்த முயற்சியை 'சுடலை ஞானம்' என்று குறிப்பிட்டோம்.

அடுத்தது – இந்த முயற்சிக்கு நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு எம்.பிக்களின் ஆதரவு தேவை. அதற்கு தற்போது மஹிந்தர் அணி பக்கம் இருக்கும் எம்.பிக்களில் குறைந்தது பதினைந்து முதல் இருபது பேரின் ஆதரவு மிக அவசியம். அதைத் திரட்டமுடியுமா என்பது அடுத்த கேள்வி.

இந்த முயற்சி சரி வராவிட்டால், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை அடுத்த ஒரு வருடத்துக்குள் ஒழிப்பார் என்ற உறுதிப்பாட்டுடன் தற்போதைய சபாநாயகர் கரு ஜெயசூரியவை, கட்சிகள் கடந்த பொது வேட்பாளராக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தி வெற்றி பெறச் செய்வது அடுத்த விடயமாகும்.

இந்த இரு வித முயற்சிகளிலும் ஐ.தே.கட்சியுடன் ஒன்றித்துச் செயற்பட சுதந்திரக் கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன இணங்கியிருக்கின்றார் என்றும் தகவல்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை அடுத்த ஓராண்டுக்குள் ஒழித்தல் என்ற ஒரே விடயத்தை முன்னிறுத்தி பொது வேட்பாளராகக் கரு ஜெயசூரிய நிறுத்தப்படுவாரானால், அந்த ஒரு காரியத்துக்காகத் தான் அறிவித்துள்ள ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளரை வாபஸ் பெற வைத்து, கருஜெயசூரியவை ஆதரிப்பது குறித்துப் பரிசீலிப்பதற்கு ஜே.வி.பி. தலைமை இணங்கியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்த இரண்டு முயற்சிகளுக்கும் முழு அளவில் ஒத்துழைப்பதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பச்சைக் கொடி காட்டியிருப்பதாகவும் தெரிகின்றது.

இவ்விடயங்களில் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு முன்னணியும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் எத்தகைய நிலைப்பாட்டை எடுக்கும் என்பது குறித்தும் ஆராயப் படுகின்றது.

இந்த விவகாரத்தில் ஐ.தே.க., சு.க., ஜே.வி.பி., தமிழ்க் கூட்டமைப்பு ஆகியவை ஒரு நேர்கோட்டில் இயங்க இணங்கினால், ஏனைய கட்சிகளும் பொதுஜன பெரமுன பக்கத்தில் இருக்கும் கணிசமான எம்.பிக்களும் அதனுடன் சேர்த்து இயங்க இணங்கலாம் என்று நம்பப்படுகின்றது. எந்த வகையிலாவது விடயம் அரிசியானால் சரிதான்!

# மந்துவில் விமான தாக்குதலில் கொல்லப்பட்டோரின் நினைவு

முல்லைத்தீவு, செப். 16

புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மந்துவில் சந்தை வளாகத்தில் 1999 ஆம் ஆண்டு 15ஆம் திகதி விமானப்படை விமானங்கள் நடத்திய மிலேச்சத்தனமான குண்டுதாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட அப்பாவிப் பொது மக்களின் 20 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று மிகவும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

வன்னிகுரோஸ் தாயக உறவுகள் நினைவேந்தல் அமைப்பின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வுகள் நேற்று விமான தாக்குதல் இடம்பெற்ற அந்த இடத்தில் நடைபெற்றன.

1999 ஆம் ஆண்டு 15ஆம் திகதி மந்துவில் பகுதியில் சந்தை வளாகத்தில் கூடியிருந்த பொதுமக்கள் மீது விமானப்படை விமானங்கள் நடத்திய தாக்குதலில் 22 பொது மக்கள் உயிரிழந்தனர்.

இந்த நிகழ்வில் உயிரிழந்தவர்களின் உறவுகள், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிவமோகன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள், நலன்விரும்பிகள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)





# சோபித தேரரின் கனவை நனவாக்க ரணில் சஜித், கரு ஒரே மேடையில் நிற்கவேண்டும்

## சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் பிக்குகள் முன்னணி கோரிக்கை



கொழும்பு, செப். 16

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, துணைத் தலைவர் அமைச்சர் சஜித் பிரேமதாஸ மற்றும் சபாநாயகர் கரு ஜயசூரிய ஆகியோர் ஒரே மேடையில் ஒன்றாக நின்றால் மட்டுமே, 2019 ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி வெற்றி பெற முடியும் என சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் பிக்குகள் முன்னணி தெரிவித்தது.

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர்களின் ஒற்றுமையால் மட்டுமே மறைந்த மாதுளுவாவே சோபித தேரர் கற்பனை செய்த சமூக நீதியை முன்னெடுக்க முடியும் என்று முகுனுவதான வடமேல் மாகாண சங்க சித்தார்த்த நாயக்க தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஒவ்வொரு முறையும் ஐக்கிய தேசியக்கட்சி பிளவுபட்டபோதும், கட்சி மட்டுமல்ல, நாடும் அழிந்தது. அதற்குச் சிறந்த உதாரணம், ஐ.தே.கவிலிருந்து லலித் அதுலத்துமுதலி மற்றும் காமினி திஸநாயக்க ஆகியோர் பிரிந்து சென்றது. அது கட்சியின் வலிமையைக் கரைத்தது. கட்சிக்கு அவர்களின் அறிவுசார் பங்களிப்பை இழப்பது ஈடுசெய்ய முடியாதது. எனவே, கட்சி மற்றும் நாட்டிற்கான தேர்தலில் வெற்றிபெற ரணில், சஜித், கரு ஆகிய மூன்று தலைவர்களும் ஒன்றிணைந்து செயற்படுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

சபாநாயகர் கரு ஜயசூர்ய மற்றும் அமைச்சர் பிரேமதாஸ ஆகியோருக்கு இடையில் முறையே ஜனாதிபதி பதவி மற்றும் பிரதமர் பதவி பகிரப்படும் ஒரு உடன்பாட்டை ஐக்கிய தேசிய முன்னணி ஏற்படுத்தவேண்டும்.

கரு ஜயசூரிய நிறைவேற் றதிகார ஜனாதிபதி பதவியை ஒழிக்கும்போது, பிரதமர் அர சில் மிகவும் சக்தி வாய்ந்தவராக மாறுகிறார். அந்த யதார்த்தத் தில், அமைச்சர் பிரேமதாஸ பிரதமராக முடியும் – என்றார்.

இதற்கிடையில், தந்திரிமலை ராஜா மகா விஹாரய மற்றும் வட மத்திய மாகாணத்தின் சங்க நாயக்க ஆகியோரின் தலைமை பதவியில் உள்ள தேரர்கள், பௌத்தர்கள், இந்துக்கள், முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் ஆதரவைப் பெறக் கூடிய ஒரே வேட்பாளர் கரு ஜயசூரிய மட்டுமே என்று தந்திரிமலை சந்திராரதன தேரர் கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக நாடு ஒரு தீர்க்கமான தருணத்தில் உள்ளது. சபாநாயகர் கரு ஜயசூரிய ஐ.தே.கவின் சிறந்த நம்பிக்கைக்குரிய ஜனாதிபதி வேட்பாளர். அவர் கூட்டணியில் உள்ள அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைக்கக் கூடியவர். அவர் ஏற்கனவே பல சந்தர்ப்பங்களில் நாட்டுக்குத் தனது திறமையையும் துணிச்சலையும் நிரூபித்துள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சபாநாயகர் கரு ஜயசூரிய தனியார் துறையில் ஒரு நிர்வாக அதிகாரியாக அனுபவத்தைப் பெற்றுள்ளார். இராணுவத்தின் ஒழுக்கத்தைக் கொண்டவர். அமைச்சராக இருந்த காலத்தில் ஜெயசூரியவுக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டை யாராலும் முன்வைக்க முடியவில்லை. அதனால்தான் அவர் சிறந்த வேட்பாளர் என்று நாங்கள் கூறுகிறோம் என்றும் சித்தார்த்த நாயக்க தேரர் மேலும் கூறினார்.

உதுதும்பர மற்றும் பததும்பரவின் சங்க நாயக்க மற்றும் பாலகொல்ல பௌத்த மையத்தின் தலைமை பதவியில் உள்ள இலங்கை ராமண்ய பீட அனு நாயக்க சந்திரஜோதி தேரர், தல்போத தம்மஜோதி நாயக்க தேரர் மற்றும் இலங்கை ராமண்ய பீட சங்கய லேககாதிகாரி கரகுலே பியதஸ்ஸி நாயக தேரர் உள்ளிட்டோர் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர். (ஐ)

**நாளை**
**17.09.2019 செவ்வாய்க்கிழமை**
நட்சத்திரம்: அச்சுவினி முழுவதும்
திதி : திருதியை பி.ப 3.19 வரை
இராகுகாலம் : 03.03 – 04.33
சுப நேரம் : 10.33 – 12.03
**சங்கடஹர சதுர்த்தி**

# எழுக தமிழ் - 2019

★ சிங்கள, பௌத்த மயமாக்கலை உடனடியாக நிறுத்து
★ சர்வதேச போர்க்குற்ற விசாரணையை நடத்து
★ தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்
★ வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் உடனடி விசாரணை நடத்து
★ வடக்கு-கிழக்கில் இராணுவ மயமாக்கலை நிறுத்து
★ இடம்பெயர்ந்த அனைவரையும் அவர்களது பாரம்பரிய இடங்களில் மீளக்குடியமர்த்து என்ற கோசங்களுடன் எழுக தமிழாய் அணிதிரள்வோம் வாரீர்!

**இன்று திங்கள் முற்றவெளி நோக்கி**

**இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத்திட்டமே. எழுக தமிழாய் எழுவோம் வாரீர்!!**




முள்ளிவாய்க்கால் படுகொலைகளை நிகழ்த்திய அகந்தையோடு சிங்கள பௌத்த விரிவாக்கமானது முன்னெப்போதும் இல்லாதளவில் முன்னெடுக்கப்படுகின்றது.

தமிழ்மண் சிதைவுற்று, தமிழரின் குடித்தொகை வெகுவாக வீழ்ச்சியடைந்துள்ளது. வடக்கில் இருந்து கிழக்கைப் பிரித்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. தோற்கடிக்கப்பட்ட மக்கள் என்ற மனநிலையுடன் தமிழ் மண் அரசியற் சகதிக்குள் மூழ்கியுள்ளது.

தமிழ் மக்கள் எதிரியின் காலடியில் சிக்குண்டு கிடக்கின்றனர். நம்பிக்கையற்ற நடை பிணங்களாய் ஈழத்தமிழ் மக்கள் அரசியற் பாலை வனத்தில் தள்ளப்பட்டுள்ளனர். தமிழ் மக்கள் தமது உரிமைக்கான போராட்டங்களை ஆரம்பித்த காலத்தை விடவும், அதற்கான தேவையும், பரப்பும், நியாயமும் இன்று மிகப் பெரியதாகியுள்ளன.

சர்வதேசத்தின் முன் நாம் வைத்த கோரிக்கைகளும் புவிசரார் அரசியலில் பந்தாடப்படுகின்றன. நம்பிக்கை இழந்த எம்மக்கள் தாமே தலைமையேற்று போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். ஒருங்கிணைத்து வலுப்படுத்த எழுக தமிழாய் அணிதிரள்வோம்.

மேலதிக தகவல்களுக்கும், தொடர்புகளுக்கும்:
**தமிழ் மக்கள் பேரவை,
61, பலாலி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.**

**எம் மக்களின் கோரிக்கைகளை முன்நிறுத்தி தேசமாய் அணி திரள்வோம்!!**

# தமிழ் மக்கள் பேரவை

www.elukathamil.com info@elukathamil.com tamilpeoplescouncil 0760025080

காலைக்கதிர் Kalaikathir



யுவதி பலியான சம்பவத்தை அடுத்து

## சென்னையில் நாலாயிரம் பனர்கள் அதிரடியாக மாநகராட்சி அகற்றல்

சென்னை,செப்.16

வீதியில் கட்டப்பட்டிருந்த பனர் சரிந்து விழுந்து கணினிப் பொறியியலாளர் சுபஸ்ரீ என்ற இளம் பெண் பலியான சம்பவத்தைத் தொடர்ந்து சென்னையில் இதுவரை 3 ஆயிரத்து 964 பனர்கள் அகற்றப்பட்டு 245 வழக்குகள் பதியப்பட்டு உள்ளன என மாநகராட்சி ஆணையாளர் கோ.பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் பனர்கள் அமைக்க சென்னை உயர்நீதிமன்றம் ஏற்கனவே தடை விதித்துள்ளது.

சட்டத்துக்குப் புறம்பாக பனர்கள் வைப்பவர்கள் மீது ஓர் ஆண்டு சிறை தண்டனை அல்லது ரூ.5 ஆயிரம் அல்லது இரண்டும் சேர்த்து தண்டனை விதிக்கப்படும் எனவும், மாநகராட்சியின் அனுமதியின்றி பனர்கள் அச்சடிக்கும் நிறுவனங்கள் மீது மாநகரச் சட்டத்தின் கீழ் அச்சக உரிமம் ரத்து செய்யப்பட்டு, 'சீல்' வைக்கப்



படும் எனவும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இவ்வாறு விதிமுறைகளை மீறியவர்கள் மீது மாநகராட்சி மற்றும் பொலிஸார் சார்பில் தகுந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில், கணினிப் பொறியியலாளர் சுபஸ்ரீ பலியான சம்பவத்தை தொடர்ந்து உங்கள் அரசுக்கும், அதிகாரிகளுக்கும் சாலைகள் மீது சிவப்பு வர்ணம் பூச இன்னும் எத்தனை லிற்றர் மனித ரத்தம் தேவை? என்று கேட்டு உயர்நீதிமன்றம் கடும் கண்டனம் தெரிவித்தது.

அனுமதியின்றி வைக்கப்படும் பனர்களை கண்காணித்து அகற்ற ஏதுவாக சென்னை மாநகராட்சியும், சென்னை பொலீஸும் இணைந்து, பிரிவுக்கு ஒரு வாகனம் வீதம், தனி செல்போன் எண்ணுடன் கூடிய 3 ரோந்து வாகனங்களைச் செயல்படுத்தி வருகின்றன.

## இந்திய இராணுவ அதிகாரியின் சடலம் கொங்கோ ஏரியிலிருந்து மீட்கப்பட்டது

கொங்கோ நாட்டில் ஐ.நா. அமைதிப்படையில் பணியாற்றிய இந்திய இராணுவ அதிகாரியின் சடலம் மீட்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு சண்டை, அரசியல் நெருக்கடியில் தவிக்கும் கொங்கோவில் அமைதியை ஏற்படுத்த ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப்படை அங்கு பணியாற்றி வருகிறது. இதில் இந்தியா உள்பட பல்வேறு நாடுகளின் வீரர்களும் இடம்பெற்றுள்ளனர்.

அந்த வகையில், கொங்கோவில் ஐ.நா அமைதிப்படையில் உள்ள இந்திய இராணுவ அதிகாரி கவுரவ் சோலங்கி, கிபு ஏரியில் படகு ஓட்டிச் சென்றபோது கடந்த சனிக்கிழமை மாலை முதல் காணவில்லை, அவரைத் தேடும் பணிகள் நடைபெற்று வந்தன. இந்த நிலையில், அவரது உடல் ஏரியில் இருந்து மீட்கப்பட்டுள்ளது என ஐ.நா. செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

# பாகிஸ்தான் தானே துண்டு துண்டாகும்

### இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஆருடம்



இந்தியாவில் சிறுபான்மையினர் பாதுகாப்புடன் இருந்தனர், பாதுகாப்புடன் இருப்பர் எனக் கூறியுள்ள மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங், பாகிஸ்தான் தன்பாட்டிலேயே துண்டு துண்டாக உடையும் எனவும் கூறினார்.

குஜராத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசும் போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

காஷ்மீர் மாநிலத்தில் 370 ஆவது பிரிவை அகற்றிய இந்தியாவின் முடிவை பாகிஸ்தானால் ஜீரணிக்க முடியவில்லை. பயங்கரவாதத்தை ஊக்குவிப்பதை பாகிஸ்தான் முதலில் நிறுத்த வேண்டும். இல்லையெனில் அந்நாடு சிதைவதை யாராலும் தடுக்க முடியாது.

சுதந்திரத்திற்கு பின்னர் இந்தியாவில் சிறுபான்மையினர் மக்களின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளது. இந்தியாவில் அவர்கள் அனைவரும் பாதுகாப்புடன் இருந்து வருகின்றனர். பாதுகாப்புடன் இருப்பர். இந்தியா சாதி அல்லது மத அடிப்படையில் மக்களைப் பிரிக்கவில்லை.அதே நேரத்தில் பாகிஸ்தானில் சீக்கியர்கள், புத்த மதத்தவர்களுக்கு எதிரான உரிமை மீறல்கள் தொடர்ந்து வருகின்றன.

மேலும் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் தன் நாட்டு மக்களுக்கு கட்டுப்பாட்டுகோட்டை கடக்க வேண்டாம் என்ற நல்ல ஆலோசனையை சொல்லி உள்ளார். ஏனென்றால் இந்திய வீரர்கள் தயாராக இருக்கின்றனர். அவர்கள் திரும்பி வர அனுமதிக்க மாட்டார்கள்.தொடர்ந்து பாகிஸ்தான் மக்கள் எல்லை கட்டுப்பாட்டு கோட்டை கடந்தால் இந்திய இராணுவம் அவர்களைத் திரும்ப விடமாட்டாது.

பாகிஸ்தானில் இது போன்ற சூழ்நிலை தொடர்ந்து கொண்டிருந்தால் அந்நாட்டை உடைக்க யாரும் தேவையில்லை. அது தானே துண்டு துண்டாக உடைந்து விடும். - என அமைச்சர் ராஜ்நாத்சிங் கூறினார்.

## ரூ.30 கோடி மதிப்புள்ள போதைப் பொருள் பறிமுதல்: ஆப்கானியர்கள் உள்பட 6 பேர் புதுடில்லியில் கைது!

ஆப்கானிஸ்தானில் இருந்து இந்தியாவுக்கு போதை மாத்திரைகளை வயிற்றில் கடத்தி வந்த சம்பவம் தொடர்பாக, அந்நாட்டைச் சேர்ந்த நால்வர் உள்பட 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதுதொடர்பாக டில்லி போதைப் பொருள் தடுப்புப் பிரிவு உயரதிகாரி சனிக்கிழமை கூறியவை வருமாறு:-

சம்பவத்தன்று, ஆப்கானிஸ்தான் நாட்டின் கந்தகார் நகரிலிருந்து ஒருவர் விமானத்தில் போதைப் பொருள் கடத்தி வருகிறார் எனப் போதைப் பொருள் தடுப்பு பிரிவுக்கு தகவல் வந்தது.

இதையடுத்து, டில்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டது. பயணி ஒருவரிடம் வழக்கம்போல சோதனை நடத்தப்பட்டபோது, அவரது உடைமையில் ஏதும் இல்லை. இருப்பினும் சந்தேகத்தின் பேரில் அவருக்கு மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்போது அவரது வயிற்றில் போதை மாத்திரை இருப்பது தெரிய வந்தது. இதையடுத்து அவரைக் கைது செய்து விசாரணை நடத்தப்பட்டது.



இதேபோன்று, அந்தப் பகுதியில் சந்தேகப்படும் வகையில் இருந்த இரு ஆப்கானிஸ்தான் நாட்டவர்களிடமும் சோதனை நடத்தப்பட்டது.

அவர்களிடமிருந்து 253 போதைப்பொருள் மாத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டன. இவற்றின் மொத்த எடை 1.8 கிலோ ஆகும்.

கைது செய்யப்பட்டவர்களிடம் நடத்திய விசாரணையின் பேரில், அவர்களிடம் போதைப் பொருள் வாங்க வந்த மற்றொரு நபரும் கைது செய்யப்பட்டார். அவரும் ஆப்கானிஸ்தான் நாட்டவராவார். நான்கு பேரிடம் தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணையின் அடிப்படையில், வசந்த குஞ்ச் பகுதியில் தங்கியிருந்த நைஜீரிய நாட்டைச் சேர்ந்த ஒருவரின் வீட்டில் சோதனை நடத்தப்பட்டு 6 கிலோ போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட அவர் அளித்த தகவலின் பேரில் நைஜீரிய நாட்டைச் சேர்ந்த மற்றொரு நபர் கைது செய்யப்பட்டு அவரிடம் இருந்து 500 கிராம் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டது. பறிமுதல் செய்யப்பட்ட மொத்தப் போதைப்பொருள்களின மதிப்பு ரூ.30 கோடிகளுக்கும் அதிகமாகும்.

போதைப் பொருள்களைக் கடத்தியதாக மொத்தம் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். போதைப்பொருள் கடத்தல் கும்பலை சேர்ந்த மற்றவர்களையும் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று அந்த அதிகாரி தெரிவித்தார்.

# தீர்க்கமான முடிவுகளுடன் நள்ளிரவு வரை நடந்த பேச்சு

## அமைச்சர் மனோ கணேசன் தகவல்



கொழும்பு, செப். 16

ஐ.தே.கவின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும், ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கும் இடையில் நேற்று முன்தினம் இரவு நடத்தப்பட்ட பேச்சுக்களில் தீர்க்கமான முடிவுகள் எட்டப்பட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமைச்சர் மங்கள சமரவீரவின் இல்லத்தில் நேற்று முன்தினம் இரவு 8 மணிக்குத் தொடங்கிய இந்தச் சந்திப்பு நள்ளிரவு வரை நீடித்துள்ளது.

ஜாதிக ஹெல உறுமய சார்பில் சம்பிக ரணவக்க, தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பில், மனோ கணேசன், பழனி திகாம்பரம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் ரவூப் ஹக்கீம், நிசாம் காரியப்பர், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில், ரிஷாத் பதியுதீன், ஆகியோரை சஜித் பிரேமதாஸ, மங்கள சமரவீர, மலிக் சமரவிக்கிரம, கபீர் காசிம், எரான் விக்ரமரத்ன ஆகியோர் சந்தித்துப் பேசினர்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக தகவல் வெளியிட்ட, மனோ கணேசன், சஜித் பிரேமதாஸ தரப்பினருடனான கலந்துரையாடல் தீர்க்கமான முடிவுகளுடன் முடிவடைந்தது என்று தெரிவித்துள்ளார்.

ஐ.தே.மு. சார்பான அதிபர் வேட்பாளர் விவகாரத்தை அடுத்த வாரத்துக்கு மேல் இழுபறிப்பட ஒருபோதும் இடமளிப்பதில்லை என்பது உட்பட பல முக்கியமான முடிவுகள் இந்தச் சந்திப்பில் எட்டப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் (நேற்று) சஜித் பிரேமதாஸ தரப்பினர் நடத்தும் சந்திப்பு முடியும் வரை, நேற்று முன்தினம் நடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஏனைய முக்கிய முடிவுகள் தொடர்பாக, பங்காளிக் கட்சிகள் சார்பில் பகிரங்கமாக எதையும் பேசுவதில்லை என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். (ஐ)

## மைதானத்தில் மாணவர்கள் மீது தாக்குதல் நடத்திய பொலிஸார்!

மட்டக்களப்பு, செப். 16

மட்டக்களப்பு சிவானந்தா தேசிய பாடசாலையின் மைதானத்தில் மாணவர்கள் சிலர் பொலிஸாரினால் தாக்கப்பட்டுள்ளனர். இதனால் நேற்றுமுன்தினம் மாலை பதற்றமான சூழ்நிலை காணப்பட்டது.

மட்டக்களப்பு சிவானந்தா தேசிய விளையாட்டு மைதானத்தில் திருகோணமலை இந்துக் கல்லூரிக்கும் மட்டக்களப்பு சிவானந்தா தேசிய பாடசாலைக்கும் இடையில் வருடாந்தம் நடைபெறும் கிரிக்கட் போட்டி நேற்று முன் தினம் நடைபெற்றது. இந்தப் போட்டியின்போது, மட்டக்களப்பு சிவானந்தா தேசிய பாடசாலை பாடசாலை மாணவர்கள் வெற்றிபெற்ற நிலையில், அந்த வெற்றியைக் கொண்டாடும் வகையில் மாணவர்கள் மோட்டார் சைக்கிளில் ஊர்வலமாகச் செல்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இதேநேரம், திருகோணமலை மாணவர்கள் சிலர் நேற்று கல்லடி பகுதியில் தாக்கப்பட்டனர் எனவும், கிரிக்கெட் போட்டியின் போதும் திருகோணமலை மாணவர்கள் சிலருக்கும் சிவானந்தா மாணவர்கள் சிலருக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையிலேயே, மைதானத்திற்குள் நுழைந்த பொலிஸார் மைதான கதவுகளை அடைத்துவிட்டு மாணவர்களைத் தாக்கியுள்ளனர். மூன்று மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் கூறப்படுகிறது. இதனால், நேற்றுமுன்தினம் இரவு வரை குறித்த பிரதேசத்தில் பதற்றமான நிலைமை நீடித்தது. (ஐ)




## ஜனநாயகப் போராளிகள் ஆதரவு!

எழுக தமிழ் பேரணியில் கலந்து கொள்ளுமாறு ஜனநாயக போராளிகள் கட்சியினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில், தாயக மீட்புக்கான தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஆயுதப் முனைப்பு மௌனிக்கப்பட்டதன் பின்னர் மிகவும் கேள்விக்குரியதான இடர்பாடுகள் நிறைந்த 10 ஆண்டுகளை ஈழத் தமிழினம் கடந்து நிற்கிறது.

எழுக தமிழ் பேரணியில் கலந்து கொள்ளுமாறு ஜனநாயக போராளிகள் கட்சியினர் அழைப்பு விடுத்துள்ளனர். இது தொடர்பாக அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், தாயக மீட்புக்கான தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஆயுதப் முனைப்பு மௌனிக்கப்பட்டதன் பின்னர் மிகவும் கேள்விக்குரியதான இடர்பாடுகள் நிறைந்த 10 ஆண்டுகளை ஈழத் தமிழினம் கடந்து நிற்கிறது.

தமிழருக்கான அரசியல் தீர்வு சம்பந்தமான அடிப்படைகளைக் கூட புரிந்து கொள்ளாத ஓர் வரட்டு மனோபாவத்தில் சிங்களம் தனது தேவைகளின் மீதான கரிசனையில் கடந்த 5 தசாப்தங்கள் எப்படிப் பயணித்ததோ அந்தப் போக்கிலிருந்து சற்றும் சளைக்காமல் தீவிரமாக பயணிப்பதை தெற்கு அரசியலின் சமகால நிகழ்வுகள் படம் பிடித்துக் காட்டுகின்றன.

இடருற்ற எமது மக்களின் வாழ்வியல் போக்கில் கணிசமான மாற்றங்கள் ஏற்பட வேண்டுமென்ற அவாவுடன் தமிழர் நிலங்களின் மீளமைப்பு மற்றும் மீள் கட்டுமானப் பணிகளின் தேவை கருதியதான அடிப்படை அபிவிருத்தி இலக்குகளையேனும் நாம் எட்டியிருக்கின்றோமா என்ற இயலாமை கலந்த கேள்வி எம்மை ஆட்கொண்டுள்ளது.

காணாமற் போனோர் பற்றிய நம்பகரமான வெளிப்பாடுகளின்றியும், அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான சாத்தியமான உறுதிப்பாடுகளின்றியும், இடருற்ற மக்களின் வாழ்வாதாரங்கள் பற்றிய கரிசனைகள் ஏதுமன்றியும், போரின் போது விழுப்புண்களை தாங்கிய போராளிகளின் எதிர்காலம் சம்பந்தமான தீர்க்கமான உறுதிப்பாடுகளின்றி ஈழத் தமிழினம் இடையனற்ற மந்தையைப் போல் வீதிக்கு வந்து நிற்கிறது.

இப்படியான மிகவும் சலனத்திற்குரியதும் இடர்பாடுகள் மிகுந்த திருப்பு முனையில் ஈழத் தமிழினம் பயணிக்குமொரு சூழலில் தமிழ் அரசியற்பரப்பின் வகிபங்காளர்களின் ஏகோபித்த செயற்பாடொன்றின் மூலமே ஈழத் தமிழினம் எதிர்கொண்டுள்ள தற்கால சவால்களுக்கு முகம் கொடுக்க முடியும் என்று ஜனநாயகப் போராளிகள் தீர்க்கமாக நம்புகின்றனர்.

இதனடிப்படையில் குறுகிய கால அரசியல் இலக்குகளுக்கு அப்பால் தமிழர் அபிலாசைகளை மனதில் இருத்தி அனைத்து அரசியல் தரப்புக்களும் ஒரே குடையின் கீழ் செயற்பட வேண்டிய அவசியத்தை நாம் வலியுறுத்தி நிற்கின்றோம்.

ஈழத் தமிழினத்தின் தற்போதைய கோரிக்கைகளுக்கு 'எழுக தமிழ்' பேரெழுச்சியானது ஜனநாயக ரீதியான மக்கள் அரசியற் போராட்டங்களுக்கு வலுச்சேர்ப்பதை உறுதிப்படுத்தவும் தமிழினத்தின் உரிமைகள் சார்ந்து காரியமாற்றும் அனைத்து அரசியற் கட்சிகள், அமைப்புக்கள், தாயக மக்கள் அனைவரையும் 'எழுக தமிழ்' பேரணியில் இணைந்து கொள்ளுமாறு ஜனநாயகப் போராளிகள் கட்சி அன்புரிமையுடன் அழைப்பு விடுக்கின்றது.

மக்கள் புரட்சி வெடிக்கட்டும். திலீபன் கனவு பலிக்கட்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)



காலைக்கதிர் Kalaikathir



# ஆழ்கடலில் அக்கினிப் பரீட்சை!

பாற்கடல்
மு.சிவநேசன்
sivanesan@usa.com



அந்தப் படகில் பலமணி நேரம் தவித்திருந்தவர்களில் ஒருவர் தொலைவில் ஒரு கப்பலை கண்டு விட்டதாக குதித்தபோது பலரும் வியப்புடன் சற்று தெம்பாக தங்களின் பார்வைகளை கடற்பரப்பில் மேய விட்டனர். அவர்களை அந்தக் கப்பல் நெருங்க நெருங்க அதன் விஸ்வரூபம், மலை போலுயர்ந்த தோற்றம் புலப்படலானது.

ஆம் இந்தக் கப்பலின் அவல அழைப்பினை ஏற்று அது இந்தத் திசை நோக்கி வந்து கொண்டிருந்தது. அதுவோ சிங்கப்பூரின் மிகப்பெரிய கொள்கலன் கப்பல் இந்தச் சிறிய உயிர்காப்பு படகினை தன்னோடு பிணைக்க முனைந்து கொண்டது. அவர்கள் வீசிய கயிற்றை பிடித்து தமது படகை அதன் அருகோடு அணைக்க அலைகடலில் பதற்றத்தில் தவித்த பயணிகளால் அவ்வளவு சுலபமாக இயலவில்லை. அதற்கான அனுபவமோ பயிற்சிகளோ அவர்களுக்கு ஏது?

கப்பலின் உச்சத்தில் இருந்து உரத்துக் கத்தி ஆணை பிறப்பிக்கும் மாலுமிகளின் உத்தரவுகள் காற்றிலும் அலையிலும் கரைந்து போகின்றன. படகோ கப்பலுடன் மோதிவிடக் கூடாது. அது கப்பலின் இயந்திரவிசை சுழற்சியை நோக்கி இழுக்கப்படுகின்ற ஆபத்தும் தென்படலானது.

படகு ஒருவாறு பிணைக்கப்பட்டதும் கப்பலின் மேல்தள விளிம்பில் இருந்து படகினுள் இறக்கப்பட்ட கயிற்று ஏணியில் மலையேறும் முயற்சி அடுத்த அனுபவமில்லாத சோதனைக் களம். அது குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் மிகவும் சிரமமானது. தவிர குழந்தைகளைச் சுமந்து கொண்டு ஏறவேண்டிய நிலைமையும் சிலருக்கு. சறுக்கினால் அல்லது கைவிட்டால் கீழே கடலுக்குள்தான் விழுகின்ற நிலைமை. படகில் மோதினால்கூட ஆபத்துத் தான்.

கடுமையான கடற் காற்றும் மழையுமான காலநிலை நிலவிய வேளையது. பிள்ளைப் பருவக் குழந்தைகளை சறுக்கும் கயிற்று ஏணியில் முதலில் ஏற விட்டு கீழே தவித்திருந்த பெற்றோரின் நிலைமையைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. அவரவர் தொடை நடுங்க ஏறித்தான் ஆக வேண்டும்.

ஒருவாறு அப் படகில் உள்ள 49 பேரும் பலத்த போராட்டங்களுக்கு பின்னர் அக் கப்பலில் தொற்றிக் கொண்டனர். அனைவரும் நனைந்து தோய்ந்த ஆடைகளுடனேயே காணப்பட்டனர். சுமார் இருபத்தி நான்கு மணி நேர உயிர் போராட்டம் நெருப்போடும் நீரோடும் காற்றோடும் என்பது மட்டுமல்ல குடிதண்ணீரும் உணவும் மாற்றுடையும் இல்லாத நிலைமை. இயற்கை கடன்களை கழிக்க வழியின்மை.

மேலும் ஒரு கப்பல் மீட்பு பணிகளில் இணைந்து இருந்தது. அவற்றிலிருந்தும் சிறிய மீட்புப் படகுகள் இறக்கப்பட்டன. கடும் காற்றில் கிளம்பும் அலைகளில் ஒரு கப்பலுக்கு அருகில் பிறிதொரு கப்பல் நெருங்க முடியாத நிலைமை. நெருங்கினால் இரும்பும் இரும்பும் மோதிவிடும்.

எரிகின்ற கப்பலில் இருந்து மீட்புப் படகுகளுக்கு இறங்குவதும் அவற்றை இயக்கி மீண்டும் தாய்க் கப்பலுடன் இணைந்து ஏறிக் கொள்வதும் அவ்வளவு சுலபமாகப்படவில்லை. படகுகள் கவிண்டதிலும் குளிரில் விறைத்ததிலும் சிலர் மாண்டு போயினர்.

இலியா கரோசியா என்ற ஜோர்ஜிய மதகுரு ஒருவர் தனது ஆசனத்தை குழந்தையோடு நின்ற பெண்ணிற்கு கொடுத்து விட்டு தள்ளாடித் தவித்து கடலுக்குள் விழுந்து கொண்டார். இக்கட்டிலும் பலருடைய வீரதீர செயல்கள் பாராட்டைப் பெறத் தவறவில்லை.

ஹெலிகள் சிலவும் மீட்பு நடவடிக்கைகளில் இறங்கி இருந்தன. கடலில் தத்தளித்த பலரையும் ஹெலிகளே மீட்டு இருந்தன. மீட்கப்பட்டவர்கள் அருகிலுள்ள இத்தாலிய துறைமுகங்களான **Bari** மற்றும் **Taranto** வேறும் பல்வேறு தளங்களில் இறக்கி விடப்பட்டனர். அவர்கள் பலரிடம் எதுவும் இருக்கவில்லை.

எரிகின்ற கப்பலில் இருந்து கடைசி நபராக அதன் கப்டன் **Captain Giacomazzi** மறுநாள் நள்ளிரவு கடந்த நிலையில் மீட்கப்பட்டான். அவ்வேளையில் அனர்த்தத்தின் இழப்புக்கள் கணிக்கப்பட்டிருக்கவில்லை.




சில உடல்கள் மீட்கப்பட்டிருந்தன. பலர் காணாமற்போயிருந்தனர். பல்வேறு இடங்களில் கரையில் இறக்கி விடப்பட்டவர்களின் எண்ணிக்கைகள் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. திட்டமிடல் சரிவர நடைமுறைப்படுத்த அவகாசம் கிடைத்திருக்கவில்லை.

முதலில் 179 பேரை காணவில்லை என்கின்ற தகவல் வெளியாகியது. பின்னர் அந்த எண்ணிக்கை படிப்படியாக குறைவடைய ஆரம்பித்தது. தீயில் கருகி மாண்டவர்கள் பன்னிருவர் எனத் தொவிக்கப்பட்டது. மொத்தம் முப்பது பேரின் உடல்கள் மீட்கப்பட்டன.

கப்பல் கட்டி இழுத்து வரப்பட்டதும் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டது. விசாரணைகள் பல்வேறு கோணங்களிலும் முடுக்கி விடப்பட்டன. கப்பலில் இருந்த குறைபாடுகள் பட்டியலிடப்பட்டபோது அவசரகால ஒளிரும் பல்புகள் செயற்படாமை, வெளியேறும் வாயில்கள் செயற்படாமை, உயிர்காப்பு முன்எச்சரிக்கை தரம் பேணப்படாமை, தீயணைப்பு பொறிமுறையில் குறைபாடுகள் என்பன முன்னணியில் இருந்தன.

கப்பலில் லொறியொன்றில் ஒளித்திருந்து பயணித்த அகதிகள் சிலர் குளிர் தாங்காது மூட்டிய தீ இந்த அனர்த்தத்திற்கு காரணமாக இருக்கலாம் என்ற கருத்தை விசாரணையின்போது பயணி ஒருவர் தெரிவித்தார். கப்பலின் இரும்புச் சுவரோடு டிறக் ரக வாகனங்களின் உரசல் காரணமாக பொறி பறந்து தீப்பற்றி இருக்கலாம் என்றும் கூறப்பட்டது.




வாகனத் தளத்தில் நின்றிருந்த டிறக் ஒன்றின் இயந்திரம் புகை கக்கியபடி இயங்கிக் கொண்டிருந்ததாகவும் கூறப்பட்டது. மக்கள் கூடும் இடங்களில் பலரதும் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியது அவரவர் கடமையாகிறது.

மியா டலஸ் என்ற 36 வயது பெண் தகவல் தருகையில்; தாமும் கணவரும் இரண்டு பெண் குழந்தைகளும் கிறிஸ்மஸ் விடுமுறையைகொண்டாட கிரேக்கத்திலிருந்து இக் கப்பலில் இடம் பிடித்ததாகவும் தங்கள் மகிழ்ச்சி சில மணித்தியாலங்களே நீடித்ததாகவும் குறிப்பிட்டார்.

கப்பலில் இரவு ஒரு மணிக்கு தூங்கப் போய் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த விடியற் காலைப் பொழுதில் தீ பற்றிய அறிவிப்பும் புகையும் கருகும் வாசனையும் பதறியடித்துக் கொண்டு எழும்ப வைத்தன எனவும் பிள்ளைகளை உலுப்பி எழுப்பியதாகவும் தகவல் தந்தார் அவர்.

சுருள்சுருளாக கீழிருந்து கரிய புகை கிளம்பவும் தீநாக்குகள் எட்டிப் பார்க்கத் தொடங்கின. தானும் பிள்ளைகளும் கும்மிருட்டில் மேல் தளத்திற்கு விரைந்தோம் என அவர் தெரிவித்தார்.

கனவில் வருவதுபோல் ஓட நினைத்தாலும் கால்களை அசைக்க இயலவில்லை. நெருக்கடியில் அசையவும் இடமிருக்கவில்லை. நாவறண்டு கொண்டது.

இது தீ அனர்த்த ஒத்திகையாக இருக்கக் கூடாதா என மனம் பரிதவித்தது.

ஒருவாறு மேல் தளத்தை அடைந்து தாங்க முடியாத உச்சக் குளிரில் தவித்திருக்கையில் திடீரென ஐஸ் போலும் குளிர்ந்த தண்ணீர் தங்கள் மீது பீய்ச்சப்பட்டதாகவும், அந்த விசையே தங்களை கடலுக்குள் தள்ளப் போதியதாகவும், பலரும் அதற்கே கத்தினர் எனவும் தான் பிள்ளைகளை பொத்திப் பிடித்ததாகவும் உதவி உதவி என்று கத்துவதை தவிர வேறு வழி தெரிந்திருக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

இத்தாலியில் கழிக்க இருந்த இனிமையான விடுமுறை இப்படி இரவினில் இக்கட்டில் மாட்டி விட்டது. நாங்கள் என்ன செய்ய வேண்டும், எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற ஆபத்துக்கால அறிவித்தல்களை தெம்பூட்டும் வகையில் அதிகாரி கள் யாரும் தந்திருக்கவில்லை. எவரும் கண்ணில்படவும் இல்லை. எல்லோரும் எங்கே போய் ஒளிந்து கொண்டார்களோ? என்ன செய்து கொண்டிருக்கிறார்களோ? எவருக்கும் எங்கள் தவிப்பு புரியவில்லையா என்ற உணர்வுதான் மேலோங்கி இருந்தது.

உயிர் காப்பு அங்கிகள் அங்கே ஒரு பெட்டியில் கிடந்தன. ஐயோ இவற்றை மாட்டிக் கொண்டு கடலில் குதிப்பதா? சாவு தண்ணீரிலா? நெருப்பிலா? பிள்ளைகளை எப்படி காப்பது?

பலரும் போட்டி போட்டுக் கொண்டு அவற்றை மாட்டிக் கொண்டனர். எல்லோருக்கும் அவை கிடைக்கவில்லை. என்னுடையதை ஒருவன் பல வந்தமாக பிடுங்க முயன்றான்.

கடல் கொந்தளிப்பாக இருப்பதாகவும் இதை நம்பி கடலில் குதிக்க முடியாது எனவும் பலரும் பேசிக் கொண்டார்கள்.

(இன்னும் வரும்)



# எழுக தமிழில் பங்கேற்க சம்பந்தனுக்கு அழைப்பு

## வருவார் என நம்புகின்றார் விக்கி

கொழும்பு, செப். 16

யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெறும் எழுக தமிழ் பேரணியில் பங்கேற்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் பேரவையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்காதபோதும், அனைத்துக் கட்சிகளையும், அமைப்புகளையும், அரசியல் சார்பின்றி இந்தப் பேரணியில் பங்கேற்குமாறு தமிழ் மக்கள் பேரவை சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எழுக தமிழ் நிகழ்வுக்கு எதிர்ப்பு வெளியிடவோ, அல்லது ஆதரவு தெரிவிக்கவோ இல்லை. எனினும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோ மாத்திரம், இந்தப் பேரணிக்கு ஆதரவு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்குக் கருத்து வெளியிட்டுள்ள சி.வி.விக்னேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை இந்த நிகழ்வில் பங்கேற்குமாறு தமிழ் மக்கள் பேரவை அழைத்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

இரா.சம்பந்தனை இந்த நிகழ்வில் பார்க்க முடியும் என்று நம்புகிறேன் எனவும் அவர் கூறியுள்ளார்.

எனினும், இன்னமும் அழைப்பு விடுக்கப்படவில்லை என்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரமுகர்களில் ஒருவரான சி.வி.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார். (ஐ)

## எழுக தமிழ் பேரணி வெல்லட்டும்!

# தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் தி.வேல்முருகன் அறிக்கை

சென்னை, செப். 16

முள்ளிவாய்க்காலில் பேரழிவைச் சந்தித்தும் மனம் தளராமல் நீதிக்கான நெடும்பயணத்தில் நடைபோடும் ஈழத் தமிழ் சொந்தங்களுக்கு தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பாக எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஈழத் தமிழர்களை அழிக்க நினைக்கும் சிங்களப் பௌத்த பேரினவாதிகள் அஞ்சி நடுங்கும்படி 'என்றும் வணங்கா மண்' இதுவென உலகுக்கு அறிவிக்க தமிழ் மக்கள் பேரவை ஒழுங்கு செய்யும் எழுக தமிழ் பேரணியை தமிழ் மக்கள் வெற்றிப்பெற செய்ய வேண்டும். ஈழத் தமிழர்களின் விடுதலைக் கனவைப் போற்றியபடி தோள்கொடுத்து நிற்கும் தொப்புள் கொடி உறவுகளாய் தமிழ்நாடு உங்களோடு உணர்வுபூர்வமாக நிற்கிறது என்பதை இவ்வேளையில் தெரிவித்துக் கொள்கிறேன் என தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் தி.வேல்முருகன் தெரிவித்துள்ளார்.




இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் –

தாயகக் கனவினில் சாவினைத் தழுவிய ஆயிரமாயிரம் இளம் காளைகளின் தமிழீழக் கனவைத் தகர்ப்பதற்கு ஆட்லெறிகள் எதுவும் இதுவரை பூமியில் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதை உலகுக்கு உணர்த்தும்படி எழுக தமிழர்களே!

விடுதலைப் பயிர் வளர்க்க தம் உயிரை விதைத்து மாவீரர்களாய் வரலாற்றில் நிலைப் பெற்றோர் தம் ஈகங்களும் விடுதலைப் போரில் அப்பாவிப் பொதுமக்கள் ஆயிரமாயிரம் உயிரை விட்டதும் வீண் போகவிடாமல் தடுக்க வீறுகொண்டு எழுக தமிழர்களே!

கொத்துக் குண்டுகளாலும் ஆட்லெறிகளாலும் உணவு, மருந்து பொருள்களைக் தடுத்ததாலும் குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் என்று வகைதொகையின்றி ஆயிரக்கணக்கில் கொன்று குவித்தவர்களை நீதியின் முன் நிறுத்தாமல் ஓயமாட்டோம் என உலகிற்கு சொல்வதற்கு எழுக தமிழர்களே!

'வெற்றிப் பெற்று விட்டோம்' என்ற இறுமாப்பில் தமிழ் மண்ணெங்கும் பௌத்த விகாரைகளை நிறுவியும் 'வளர்ச்சித் திட்டங்கள்' என்ற பெயரால் தமிழ் மண்ணை ஆக்கிரமித்தும் சிங்களப் பௌத்தமயமாக்கும் பேரினவாதிகளின் கட்டமைப்பு ரீதியான இன அழிப்புக்கு எதிராய் 'உடல்கள் வேறு உணர்வுகள் ஒன்று' என்று எழுக தமிழர்களே!

ஆண்டுகள் பத்து உருண்டோடிவிட்டதால் 'சோர்ந்து விடுவோம்' என்றெண்ணி வெற்றிக் கூக்குரல் இடுவோரின் கொட்டம் அடக்க ஆழிப் பேரலைப் போல் எழுக தமிழர்களே!

தாமே முன்மொழிந்து கொண்டு வந்த தீர்மானத்தை நடைமுறைபடுத்தாமல் இரண்டாண்டு, இரண்டாண்டு என்று காலம் கடத்தி அத்தீர்மானத்தைக் காலில் போட்டு மிதிக்கும் இனப்படுகொலையாளர்களை உலகத்தின் முன்பு பொறுப்புக்கூற வைக்காமல் நாங்கள் ஓயப்போவதில்லை என்பதை சர்வதேச சமூகம் அறிந்து கொள்வதற்கு எழுக தமிழினமே!

போர்க் குற்றச்சாட்டு காரணமாக ஐ.நா. அமைதிக் காப்பு படையில் இருந்து திருப்பி அனுப்பப்பட்ட சர்வேந்திர சில்வாவை இராணுவத் தளபதியாக்கி உலகின் கண்களில் மண்ணைத் தூவி இனப்படுகொலைக்குப் பரிசளித்து மகிழும் சிங்கள ஆட்சியாளர்களின் குலைநடுங்க கொப்பளிக்கும் கோபத்தோடு எழுக தமிழர்களே!

மக்களிடம் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்தில் அடியெடுத்து வைத்துவிட்டு எதிரிகளின் பகடைக் காயாக மாறிப் போன தமிழ்த் தலைவர்களுக்கு இறுதி எச்சரிக்கை ஒலி எழுப்ப எழுக தமிழர்களே!

உள்நாட்டு விசாரணையென்று உலகை ஏய்த்துவரும் சிங்கள ஆட்சியாளர்களுக்கு உற்றத் துணையாய் நின்று தமிழர்களின் கண்ணில் குத்தும் காரியத்தை செய்வோரின் துரோகப் படலத்திற்கு முடிவுகட்ட எழுக தமிழர்களே!

நம்மை கிள்ளிக் கீரையாய் மதித்து இயன்றவரை வளைக்கலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கும் பிராந்திய வல்லரசுகளும் உலக வல்லரசுகளும் தமிழர்களின் போராட்ட உறுதியை அறிந்தேற்கும்படி அணிஅணியாய் திரள்க தமிழர்களே!

சிதறிக் கிடக்கும் தமிழ்த் தலைவர்களை ஓரணியில் நிறுத்தும் வரலாற்று சக்தியாய் தமிழ் மக்கள் பேரவையின் 'எழுக தமிழ்' பேரணி அமையட்டும்!

மீண்டும் வருவோம் என்ற நம்பிக்கையோடு எதிரியிடம் கையளிக்கப்பட்டதால் ஆயிரமாயிரமாய் காணாமலடிக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கோரி எழுக தமிழர்களே!

முன்பொருமுறை இதே செப்ரெம்பர் மாதத்தில் இந்திய அமைதிப் படைக்கு எதிராய் ஈழத் தமிழர்களை எழுச்சிக் கொள்ளச் செய்ய இந்தியாவின் ஆக்கிரமிப்புப் பசிக்கு தன்னுயிரை இரையாக்கி வீரச்சாவடைந்த ஈகச்சுடர் திலீபனின் நினைவுகள் வழிநடத்த ஆக்கிரமிப்பாளர்களின் வேட்கையைத் தீக்கிரையாக்கும் எரிமலை என எழுக தமிழர்களே!

எத்தனை எத்தனை ஈகங்கள், எத்தனை எத்தனை வலிகள், எத்தனை எத்தனை இழப்புகள் எத்தனை எத்தனை இடப்பெயர்வுகள், எத்தனை எத்தனை துரோகங்கள் – இத்தனைக்கும் விடைகாணாமல் வீறுகொண்டெழுந்த இனம் பின் வாங்காது எனச் அறிவிக்க எழுக தமிழர்களே! – என்றுள்ளது. (ஐ)

## வெற்றி பெறட்டும் எழுக தமிழ்

# விடுதலைச் சிறுத்தைகள் வாழ்த்து

சென்னை, செப். 16

தமிழ் மக்கள் பேரவையின் சார்பில் இன்று 16ஆம் திகதி தமிழீழம் உட்பட உலகம் முழுவதும் நடைபெறவிருக்கும் 'எழுக தமிழ்'எழுச்சிப் பேரணியின் கோரிக்கைகள் வெற்றிப் பெற விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம் என விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் –

' தமிழர்களின் பூர்வீக நிலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆக்கிரமிப்பு, மற்றும் சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும்; சர்வதேச போர்க்குற்ற விசாரணைகளை உடனடியாக மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்; தமிழ் அரசியல் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்படவேண்டும்; வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான நம்பத்தகு விசாரணைகள் நடைபெறவேண்டும்; வடக்கு கிழக்கு மாகாணங்களில் இராணுவமயமாக்கல் நிறுத்தப்பட வேண்டும்; இடம்பெயர்ந்த – புலம் பெயர்ந்த தமிழ்மக்கள் அனைவரையும் அவரவருக்குரிய பாரம்பரிய காணிகளில் மீள்குடியமர்த்த வேண்டும் ' என பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இப்பேரணி நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள இந்த எழுச்சிப்பேரணியில் பங்கேற்க வேண்டுமென தமிழ்ச்சொந்தங்கள் யாவருக்கும் அழைப்பு விடுத்துள்ள தமிழ் மக்கள் பேரவையின் தலைவரும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவருமான நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்களின் இம்முயற்சி வெற்றிபெற வாழ்த்துகிறோம்.

போர்க்குற்றம் மற்றும் இனக் கொலை தொடர்பாக சர்வதேச நீதிமன்றத்தில் பன்னாட்டுப் பொறிமுறை விசாரணை நடத்த வேண்டும் என்னும் கோரிக்கையை வலியுறுத்தி ஏற்கனவே விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் சார்பில் தமிழகம் முழுவதும் மாபெரும் கையெழுத்து இயக்கம் மற்றும் ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளோம் என்பதைத் தமிழ்ச்சமூகம் நன்கு அறியும். தற்போது அதே கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெறும் இந்த எழுச்சிப்பேரணி வெற்றிபெற வேண்டுமென வாழ்த்துவதோடு, அதே நாளில் தமிழகத்தில் நடைபெறும் எழுகதமிழ் எழுச்சிப் பேரணியில் விடுதலைச்சிறுத்தைகள் கட்சியும் பங்கேற்கிறது என அறிவிக்க கடமைப்பட்டு இருக்கிறோம்.

ஐ.நா பேரவை உள்ளிட்ட சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையையும் ஆதரவையும் பெறத்தக்க வகையில் ஒட்டுமொத்த தமிழ்ச்சமூகமும் ஒற்றுமையாகத் திரண்டெழ வேண்டுமென விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் சார்பில் வேண்டுகோள் விடுக்கிறோம் – என்றுள்ளது.

# மின்தடை

யாழ்ப்பாணம், செப். 16

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்ட மைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை –

**கிளிநொச்சி பிரதேசத்தில் –**

அறிவியல்நகர், MAS Active யுனிச் செலா, விவசாய பீடம், கார்கில்ஸ் Argo, வெள்ளாங்குளம் இராணுவ முகாம், ஆனந்தபுரம், பாரதிபுரம், கிருஸ்ணபுரம், மலையாழ்புரம், இரணைமடு சந்தி, NAITA, கிளிநொச்சி வைத்தியசாலை, இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், Wickramaratne pvt LTD, Ware House Complex இராணுவ ஆதார வைத்தியசாலை ஆகிய இடங்களிலும் –

**மன்னார் பிரதேசத்தில் –**

தேவன்பிட்டி, வெள்ளாங்குளம், பாலியாறு, மூன்றாம்பிட்டி, தேத்தாவடி, அந்தோனியார்புரம், இலுப்பைக்கடவை, கள்ளியடி ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# தனக்கு எய்ட்ஸ் இருப்பதாக ஒப்புகொண்ட பிரபல வீரர்!

ரக்பி விளையாட்டில் முன்னணி வீரராக திகழும் கேரத் தோமஸ் எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்ட தனக்கு எய்ட்ஸ் நோய் இருப்பதாக ஒப்புகொண்டுள்ளார்.

ரக்பி விளையாட்டின் மிகப்பெரிய ஆளுமையாகவும், ஜாம்பவானாகவும் கருதப்படுபவர் கேரத் தோமஸ்.




வேல்ஸ் அணியின் தலைவராக இருந்த அவர் தற்போது வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் தனக்கு எச்.ஐ.வி. பாதிப்பு இருப்பதாகக் கூறும் அவர், பல ஆண்டுகளாக தான் இருட்டான மனதுடன்வாழ்ந்துவருகிறாள்எனக்குறிப்பிட்டுள்ளார்.

மேலும்தன்னால் இந்த ரகசிய வாழ்க்கையை வாழ முடியவில்லை என்று வேதனையுடன் குறிப்பிட்டுள்ள கேரத், மன அழுத்தத்துடன் இருந்ததால் தற்கொலைக்கு கூட முயன்றதாக அந்த வீடியோவில் தெரிவித்துள்ளார். தற்போது அந்த மனநிலையில் இருந்து மீண்டு வந்த அவரின் சிறப்பு ஆவணப்படம் எதிர்வரும் 18ஆம் திகதி பிபிசி 1 தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# மட்ரிட்டில் ரொனால்டோ?



பிரபல உதைபந்தாட்ட வீரரான ரொனால்டோ மீண்டும் ரியல் மட்ரிட் அணியில் இணைந்தால் சிறப்பானதாக இருக்கும்என்றுதெரிவித்துள்ளார் சிடானி சிடேன்.

சிடேனின் பயிற்சியின் கீழ் ரொனால்டோ மட்ரிட்டுக்காகச்சிறப்பாகவிளையாடினார். ரியல் மட்ரிட் கழகம் 2016, 2017, 2018ஆம் ஆண்டுகளில் ஐரோப்பியாவிலேயே முன்னணிக் கழகமாக விளங்க ரொனால்டோவின் பங்களிப்பு அதிகம். அதன் பின்னர் அந்தக் கழகத்தில் இருந்து விலகிய சிடேன் தற்போது மீண்டும் மட்ரிட்டில் இணைந்துள்ளார். ரொனால்டோ தற்போது இத்தாலி நாட்டைச் சேர்ந்த யுவென்டாசுக்காக விளையாடுகின்றார். இந்த நிலையிலேயே தனது விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளார் சிடேன்.

மே மாதம் இடம்பெற்ற பத்திரிகையாளர்கள் சந்திப்பிலும் சிடேன் இவ்வாறு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சிவகுருநாதன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண போட்டி நிகழ்வில் அமைச்சர் ரணதுங்கவும் ராகவனும்









யாழ் இந்துக் கல்லூரி மற்றும் கொழும்பு ஆனந்தா கல்லூரிகளுக்கு கிடையிலான சிவகுருநாதன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணம் 2019 துடுப்பாட்டப் போட்டியின் பிரதம அதிதிகளாக ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனும் சிவில் விமான போக்குவரத்து மற்றும் போக்குவரத்து துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவும் கலந்து சிறப்பித்தனர்.
வருடாந்தம் இடம்பெறும் இந்த துடுப்பாட்ட போட்டி சென்.ஜோன்ஸ் கல் லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அந்தப் போட்டியின் சில பதிவுகள் .

# கெய்ல் அணியை தவிடுபொடியாக்கிய பொல்லார்ட் அணி!



கரீபியன் லீக் தொடரில் பொல்லார்ட் தலைமையிலான டிரின்பாகோ நைட் ரைடர்ஸ் அணி சிக்சர்களாக பறக்கவிட்டு, 20 ஓவரில் 267 ஓட்டங்கள் குவித்தது.

மேற்கிந்திய தீவுகளில் கரீபியன் லீக் ரி20 தொடர் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் இரவு ஜமைக்காவில் நடைபெற்ற போட்டியில், பொல்லார்டு தலைமையிலான டிரின்பாகோ நைட் ரைடர்ஸ் அணியும், கெய்ல் தலைமையிலான ஜமைக்கா தல்லாவாஸ் அணியும் மோதின.

முதலில் ஆடிய டிரின்பாகோ அணி 20 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 267 ஓட்டங்கள் குவித்தது. தொடக்க வீரர் சிம்மோன்ஸ் 42 பந்துகளில் 86 ஓட்டங்களும், காலின் முன்ரோ 50 பந்துகளில் 8 சிக்சர்கள், 6 பவுண்டரிகளுடன் 96 ஓட்டங்களும் குவித்தனர். அணித்தலைவர் பொல்லார்டு 17 பந்துகளில்3சிக்சர்கள்,4பவுண்டரிகளுடன் 45 ஓட்டங்கள் விளாசினார்.

பின்னர் ஆடிய ஜமைக்கா அணி 20 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 226 ஓட்டங்கள் எடுத்து தோல்வியடைந்தது. அந்த அணியில் அதிகபட்சமாக கிளென் பிலிப்ஸ் 62 ஓட்டங்களும், கெய்ல் 39 ஓட்டங்களும் எடுத்தனர்.

கரீபியன் லீக் தொடரில் பொல்லார்ட் அணி குவித்த இந்த ஸ்கோர் தான் அதிகபட்சம் ஆகும். அத்துடன் ரி20 வரலாற்றில் இது இரண்டாவது அதிகபட்ச ஸ்கோர் ஆகும்.

# ஸ்மித் புதிய சாதனை!

டெஸ்ட் கிரிக்கெட்டில் பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரர் இன்சமாம் உல் ஹக்கின் சாதனையை ஆஸ்திரேலியாவின் ஸ்டீவ் ஸ்மித் முறியடித்துள்ளார்.

ஓர் அணிக்கு எதிராக தொடர்ந்து 10 அரை சதங்கள் அடித்த முதல் வீரர் என்ற பெருமையையும் ஸ்டீவ் ஸ்மித் பெற்றுள்ளார்.

ஆஷஸ் தொடரில் இங்கிலாந்துக்கு எதிரான கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஸ்டீவ் ஸ்மித் இந்த சாதனையை படைந்துள்ளார்.

சிறப்பான ஆட்டத்தால் இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லியை பின்னுக்குத் தள்ளி முதலிடத்தைக் கைப்பற்றிய அவர், ஐசிசி தரவரிசையில் முதலிடத்தை தக்க வைத்துள்ளார்.

ஆஷஸ் தொடரில் விளையாடியுள்ள 10 இன்னிங்சில் மாத்திரம் ஸ்டீவ் ஸ்மித் 239, 76, 102, 83, 144, 142, 92, 211, 82, 80 ஓட்டங்களை விளாசியுள்ளார்.



# தியாகி திலீபன் நினைவேந்தல் நேற்று நல்லூரில் உணர்வுபூர்வமாக ஆரம்பம்













**(எஸ். நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம், செப். 16

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நீர் கூட அருந்தாமல் 12 நாள்கள் உண்ணாவிரதம் இருந்து உயிர் துறந்த தியாக தீபம் திலீபனின் 32 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கட்சி பேதங்களைக் கடந்து மிகவும் உணர்வெழுச்சியுடன் நேற்று ஆரம்பமாகியது.

நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபன் நினைவாலயத்தில், தியாகி திலீபனின் உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்ட நேரமான காலை 9.45 மணிக்குப் பொதுச் சுடரேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

பொதுச் சுடரை மாவீரர் தேவானந்தனின் தாயார் ஏற்றி வைக்க, தியாகி திலீபனின் உருவப் படத்துக்கான தியாகச் சுடரை மாவீரர் சஞ்சீவனின் சகோதரன் ஏற்றி வைத்தார். தொடர்ந்து திரண்டிருந்த மக்கள் அனைவரும் கட்சி வேறுபாடுகளின்றி மிகவும் உணர்வுபூர்வமாக மலரஞ்சலி செலுத்தி மலர் மாலை அணிவித்தனர்.

யாழ். மாநகர முதல்வர் இ.ஆனல்ட், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் ஒற்றுமையாகவும் உணர்வுபூர்வமாகவும் நினைவேந்தல் நிகழ்வில் பங்கேற்றனர்.

(ஐ – 07)






காலைக்கதிர் Kalaikathir



# கோணாவில் பாடசாலையை எரித்த கயவர்களைக் கைது செய்து தண்டனை வழங்க வேண்டும்

மனித இனத்தின் அறிவுக்கண்ணைத் திறப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் இடமாக பாடசாலையே காணப்படுகின்றது. ஒரு மனிதனுக்கு அறிவு, திறன் ஆகியவற்றை வழங்கி அவனது மனப்பாங்கில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி அவனை மனிதனாக்கி வாழ வைப்பதற்குரிய முக்கிய பணியை பாடசாலைகளே ஆற் றுகின்றன. இதனால்தான் பாடசாலைகள் இறை வழிபாட்டுத் தலங்களை விட மேலானவையாகப் போற்றப்படுகின்றன.

அறிவுக்கண்ணைத் திறந்து மனிதனை மனிதனாக்கி மனிதனாக வாழவைக்கும் மிகமுக்கிய பணியை ஆற்றும் பாடசாலையை எரிப்பது என்பது மனிதன் தனக்குத் தானே தீ மூட்டி தன்னை எரித்துக்கொள்வதுடன் தனது இனத்தையே தீ மூட்டி எரித்து அழித்துக் கொள்வதற்கு ஒப்பானது.



● சி.சிவேந்திரன்

தன்னையும் தன்னினத்தையும் தீயிட்டு எரித்து அழித்தல் போல கிளி.கோணாவில் மகாவித்தியாலயத்திற்குத் தீயிட்டு அதிபர் அலுவலகத்திலிருந்த அனைத்து ஆவணங்களும் எரித்தழிக்கப்பட்ட மிகவும் மோசமான குற்றச் செயல் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் ஏ -9 வீதிக்கு மேற்குப் பக்கமாக மிகவும் பின்தங்கிய பிரதேசத்தின் அதிகளவு மக்கள் செறிந்து வாழும் கோணாவில் கிராமத்தின் மத்தியில் கிளி.கோணாவில் மகாவித்தியாலயம் அமைந்து காணப்படுகின்றது.

இப்பாடசாலையைச் சுற்றி கோணாவில், காந்திக்கிராமம், யூனியன்குளம், ஊற்றுப்புலம், சோலைநகர் போன்ற மிகவும் வசதி வாய்ப்புக்களில் மிகவும் பின்தங்கிய கிராமங்கள் காணப்படுகின்றன இக்கிராமங்களில் வசிக்கும் மாணவச் சிறார்களே இங்கு கல்வி கற்று வருகின்றார்கள்.

இக்கிராமங்கள் வசதிவாய்ப்புக்களில் பின்தங்கிய நிலையில் காணப்பட்டாலும் இங்குள்ள சிறார்கள் கல்வி கற்கும் கோணாவில் மகா வித்தியாலயத்திற்கு மாணவர்களுக்குரிய வசதிவாய்ப்புக்கள் அனைத்தையும் அரசு வழங்கியுள்ளது. நிறைவான கல்விச் செயற்பாடுகளும் இப்பாட



சாலையில் குறைவின்றி இடம்பெற்று வருவதனை மாணவர்களது பெறுபேறுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

இந்நிலையில் கடந்த 12.09.2019 ஆம் திகதி வியாழக்கிழமை பாடசாலைச் செயற்பாடுகள் அனைத்தும் முடிந்து அனைவரும் பாடசாலையை விட்டு வெளியேறியதன் பின்னர், பின்னிரவு வேளையில் பாடசாலைக்குள் புகுந்த கயவர்கள் பாடசாலைக் கட்டடத் தொகுதியிலுள்ள அதிபர் அலுவலகத்திற்கு மண்ணெய் ஊற்றி தீ மூட்டி எரித்து அனைத்து முக்கிய ஆவணங்களையும் சாம்பலாக்கி மன்னிக்க முடியாத மனிதமற்ற பெரும் குற்றத்தைப் புரிந்துள்ளார்கள். மறுநாள் காலை பௌர்ணமி விடுமுறை நாள் விசேட வகுப்புக்காகப் பாடசாலைக்குச் சென்ற மாணவர்களும் ஆசிரியருமே இதனைக் கண்டு அதிபர் உள்ளிட்ட அனைவருக்கும் அறிவித் ததைத் தொடர்ந்து அங்கு விரைந்த பெற்றோர், பழைய மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் என அனைவரும் தீயை அணைக்க முற்பட்ட வேளையில் முக்கிய ஆவணங்கள் அனைத்தும் தீயில் எரிந்து நாசமாக்கப்பட்டுள்ளமையைக் கண்ணுற்றுக் கண் கலங்கி நின்றனர்.

இத்துன்பியல் காட்சியைக் கண்ட மாணவச் சிறார் கள் பலர் கண்ணீர் விட்டு விம்மி விம்மி அழுததனைக் கண்டவர்களது கண்கள் கலங்கி வழிந்தன. பாடசாலையின் அலுவலக அனைத்து ஆவணங்களும் எரிந்து சாம்பலாக்கப்பட்டு புகை வெளியேறிக்கொண்டிருப்பதனையும் அங்கு கற்கும் மாணவச் சிறார்களது நிலையையும் நோக்கி நினைக்கவே முடியாத ஒரு துன்பியல் சோக நிலை. அதில் எரிந்து அழிந்தவை அனைத்துமே மாணவர்களது மிக முக்கியமான ஆவணங்கள்.

மாணவச் சிறார்களது ஒவ்வொரு ஆண்டுக்கும் உரிய க.பொ.த.சாதாரணதரம், க.பொ.த.உயர்தரம் உள்ளிட்ட முக்கிய பரீட்சைப் பெறுபேறுகள், மாணவர்களது இணைபாட விதானச் செயற்பாடுகள், போட்டிகளில் பெற்றுக் கொண்ட சாதனை அறிக்கை ஆவணங்கள், அதிபர், ஆசிரியர்களது முக்கிய ஆவணங்கள், வருட அடிப்படையி லான மாணவர்களது புள்ளிப் பதி வேடுகள், பாடசாலைத் திட்ட,திட்ட முன் னேற்ற அறிக்கைகள், செயற்பாட்டறிக் கைகள், வருடஅடிப்படையிலானகல்விமுன்னேற்ற அறிக்கைகள், புகைப்பட ஆதாரங்கள், வாழ்த்து மடல்கள், வர லாற்றுச் சாதனை ஆவணங்கள், வெற் றிக் கேடயங்கள் என பாடசாலைக் குரிய அனைத்து ஆவணங்களுமே ஈரமற்ற தீயவர்களது தீயில் எரிந்து நாசமாக் கப்பட்டுள்ளன.

இத்தீயை வைத்த தீயவன் இது பாடசாலை என்பதை ஒரு கணம் தனது மனதில் நினைத்திருப்பானாகவிருந்தால் இப்படிச் செய்திருக்கமாட்டான். இப்பாடசாலைக்குத் தீ வைத்தவ னுக்கு மனநிலை இல்லாதவன் என்பதை விட மனசே இல்லாத இழிபிறப்பு. இப்படியான இழிபிறப்பு இன்னும் இப்பாரில் இயல்பாக உலா வரக் கூடாது. இந்த மோசமான குற்றத்தைப் புரிந்த குற்றவாளிகள் விரைவாகக் கண்டறியப்பட்டு இப்பாடசாலையில் கல்வி கற்கும் இந்த மாணவச் சிறார்கள் அறியக்கூடியதாக கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன்நிறுத்தப்பட்டு சட்டப்படி உரிய தண்டனைகள் வழங்கப்பட வேண்டும். இது ஒரு படிப்பினையாக அமைய வேண்டும்.



குற்றம் செய்பவனுக்கு உரிய தண்டனை வழங்கப்படு வதால் நாட்டில் குற்றவாளிகளும் குற்றச் செயல்களும் அதிகரிப்பதைத் தடுக்க முடியும். குற்றம் செய்த குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வழங்கப்படாது குற்றவாளிகள் பாதுகாக்கப்படுவதனால் பல குற்றவாளிகள் உருவாக்கப்படுகின்றார்கள். அவர்களால் குற்றச் செயல்களும் அதிகரித்துச் செல்கின்றன. இது தடுக்கப்பட வேண்டும் இதற்குரிய சிறந்த வழி குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு அவர்களுக்குரிய தண்டனைகளை நிறைவேற்றுவதேயாகும்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கோணாவில் மகா வித்தியாலயத்தை எரித்து அனைத்து ஆவணங்களையும் சாம்பலாக்கி நாசம் செய்த குற்றவாளிகள் பொலிஸாரினது உரிய நடவடிக்கை மூலம் கைது செய்யப்பட வேண்டும். இது இலங்கையில் மிக மோசமான ஒரு குற்றச் செயல் இது கல்வி அமைச்சுடன் தொடர்புடைய விடயம். இவ்விடயத்தில் இலங்கையின் கல்வி அமைச்சர் மிகுந்த கவனம் செலுத்தி இந்த மோசமான குற்றத்தைப் புரிந்த குற்றவாளிகளைக் கைது செய்ய உரிய கவனம் செலுத்த வேண்டும்.

பாடசாலையைக் கொளுத்திய குற்றவாளிகளைத் தப்பிக்கவிடக் கூடாது. கோணாவில் மகா வித்தியாலயத்தின் அதிபர் அலுவலகத்திற்குத் தீ மூட்டச் சென்றவர்கள் சம்பவம் நடந்த அன்றைய தினம் பின்னிரவு வேளையில் தான் பாடசாலைக்குள் நுழைந்து தீ மூட்டியிருப் பார்கள் என்பது சம்பவம் இடம்பெற்ற சூழலை நோக்கும் போது ஊகிக்க முடிகின்றது.

ஆகவே நாட்டிலுள்ள அனைத்துத் தரப்பினரும் ஒரு தொலைத் தொடர்பு நிறுவனத்திற்குரிய தொலைபேசியையே பயன்படுத்துபவர்களாகக் காணப்படுகின்றார்கள். இக்குற்றவாளிகளும் அன்றைய தினம் பாடசாலைச் சூழலுக்குள் கைத் தொலைபேசிகளுடனேயே சென்றிருப்பார்கள். அன்றைய தினம் கைத்தொலைபேசியுடன் அவர்கள் சென்றிருந்தால் அதனைக்கொண்டு பாடசாலை இடவமைப்புக்குள் அன்றைய தினம் இரவு யாரது கைத்தொலைபேசி சமிக்ஞை இருந்துள்ளது என்பதைத் தொலைத்தொடர்பு நிலையத்தின் துணையுடன் அறிந்து குற்றவாளிகளைக் கைது செய்வது சுலபமானது.

பாடசாலையை எரித்த குற்றவாளிகள் தொலைபேசியுடன் சென்றிராது விட்டாலும் பொலிஸாரது உரிய நடவடிக்கைகளின் மூலம் குற்றவாளிகள் கைது செய்யப்பட வேண்டும் என்பதே அனைவரதும் கோரிக்கையாகவுள்ளது.

எதிர்காலச் சந்ததிக்கு நல்வழிகாட்டிக் கல்வி புகட்டும் கல்வி அமைச்சின் திட்டத்தை செயற்படுத்தும் கோயிலை விட மேலான இடமான பாடசாலைக்குத் தீ மூட்டி எரித்த குற்றவாளிகளைக் கைது செய்து உரிய தண்டனை வழங்காது விட்டால் இப்படியான மிகமோசமான குற்றவாளிகள் பல இடங்களிலும் உருவாகி துணிவுடன் இப்படியான பாரதூரமான குற்றங்களைப்புரிய அவர்களுக்கு வாய்ப்பாக அமையும். குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும். இப்படியான குற்றங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாமல் தடுக்கப்பட வேண்டும். *



# ஆப்கானிஸ்தான் படைகளிடம் 41 தலிபான் தீவிரவாதிகள் சரண்

ஆப்கானிஸ்தானின் வோர்சாஜ் மாவட்டத்தில் 41 தலிபான் தீவிரவாதிகள் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு, ஆப்கானிஸ்தான் படைகளிடம் சரண் அடைந்தனர்.

ஆப்கானிஸ்தானில் தொடர்ந்து 19 ஆவது ஆண்டாக தலிபான் தீவிரவாதிகள், உள்நாட்டு படைகளுடன் சண்டையிட்டு வருகின்றனர்.

இந்த போரினால் பலத்த உயிரிழப்புகள் ஏற்பட்டு வருகின்றன. இதற்கிடையே இன்னொரு பக்கம், தலிபான் தீவிரவாதிகள் ஆயுதங்களைக் கைவிடவும், அரசுக்கு எதிரான போர்க்குணத்தைக் கைவிடவும், 2010 ஆம் ஆண்டு சமாதானம் மற்றும் நல்லிணக்கச் செயல்முறையை ஆப்கானிஸ்தான் அரசு தொடங்கியது.

அதன்பின்னர் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தலிபான் தீவிரவாதிகள் ஆயுதங்களைக் கீழே போட்டு நல்லிணக்க செயல்முறையில் இணைந்தனர்.

இந்த நிலையில், டாக்கார் மாகாணத்தின், வோர்சாஜ் மாவட்டத்தில் 41 தலிபான் தீவிரவாதிகள் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு, ஆப்கானிஸ்தான் படைகளிடம் சரண் அடைந்தனர் என ஆப்கானிஸ்தான் இராணுவம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# 9/11 தாக்குதல் நினைவு தின வேளையில் 9/11 எடையில் பிறந்த அபூர்வக் குழந்தை

## பிரசவமும் இரவு 9 மணி 11 நிமிஷமே

வொஷிங்டன், செப்.16

அமெரிக்க தாக்குதல் நினைவு தினத்தில் 9 பவுண்ட் 11 அவுன்ஸ் எடையில் அபூர்வ குழந்தை ஒன்று பிறந்துள்ளது.

அமெரிக்க இராணுவ தலைமையகமான வொஷிங்டனின் பென்டகன் மீதும், நியூயோர்க் உலக வர்த்தக மையத்தின் இரட்டை கோபுரக் கட்டடம் மீதும் பின்லேடனின் அல்கொய்தா தீவிரவாதிகள் விமானங்களை மோதி அதி பயங்கரத் தாக்குதல்களை நடத்தி 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரைக் கொன்று குவித்தனர்.



2001 ஆம் ஆண்டு, 9 ஆவது மாதமான செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல்கள் 9/11 தாக்குதல்கள் என வர்ணிக்கப்படுகின்றன.

கடந்த 11 ஆம் திகதி இந்தத் தாக்குதலின் 18 ஆவது வருட நினைவுதினம் அமெரிக்கா முழுவதும் கடைப்பிடிக்க ப்ப டது.

அந்த நாளில் டென் னிசி மாகாணம், ஜெர்மன்டவுன் நகரில் உள்ள மெத்தடிஸ்ட் ஆஸ் பத்திரியில் இரவு 9 மணி 11 நிமிடத்தில் கேமட்ரி யோன் மூர் பிரவுன் என்ற நிறைமாத கர்ப் பிணிக்கு அழகான பெண் குழந்தை பிறந்தது.

இந்தக் குழந்தையின் எடை 9 பவுண்ட் 11 அவுன்ஸ் ஆகும்.

9 ஆவது மாதத்தின் 11 ஆவது நாளில் இரவு 9 மணி 11 நிமிடத்தில் பிறந்த குழந்தையின் எடை 9 பவுண்ட் 11 அவுன்ஸ் என்பது அபூர்வ நிகழ்வாக அங்கு பார்க்கப்படுகிறது.

இதுபற்றி கேமட்ரியோன் மூர் பிரவுன் கூறும்போது, பேரழிவு மற்றும் அழிவுகளுக்கு மத்தியில் எனது மகள் புதிய வாழ்வாக அமைந்திருக்கிறாள் என பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

இந்த குழந்தைக்கு பெற்றோர் கிறிஸ்டினா என பெயர் சூட்டி மகிழ்கின்றனர்.

# இந்தோனேசியாவில் மீண்டும் நிலநடுக்கம்

இந்தோனேசியாவில் உள்ள ஹெல்மாஹேரா தீவில் வெள்ளி மாலை நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவில் 5.9 ஆக பதிவாகியுள்ளது.

நிலநடுக்கத்தின் மையம் சுமார் 10 கிலோமீற்றர் ஆழத்தில் இருந்தது என ஐக்கிய நாடுகளின் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



நிலநடுக்கத்தால் உயிரிழப்பு தொடர்பான தகவல் இது வரை வெளியாகவில்லை.

பசுபிக் பெருங்கடலின் ‘நெருப்பு வளையம்’ என்று அழைக்கப்படும் பகுதியில் இந்தோனேசியா இருக்கின்றமையால் தொடர்ச்சியாக நிலநடுக்கத்தாலும், எரிமலை வெடிப்புகளாலும் பாதிக்கப்படுகிறது. கடந்த ஓகஸ்ட் 2 ஆம் திகதி ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 6.9 ஆக பதிவாகியிருந்தது குறிப்பிடத்தக்கது.


# அமெ. தாக்குதலில் பின்லேடனின் மகனும் பலி அறிக்கை மூலம் உறுதி செய்தார் அதிபர் டிரம்ப்

வொஷிங்டக், செப்16

ஒஸாமா பின்லேடனின் மகன் ஹம்சா பின்லேடனின் சாவை அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் உறுதி செய்து ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அமெரிக்காவில் 2001 ஆம் ஆண்டு, அதி பயங்கர தாக்குதல்களை நடத்தி பதற்றத்தில் ஆழ்த்தியவர் அல்கொய்தா இயக்க தலைவர் பின்லேடன். இவர் பாகிஸ்தானில் பதுங்கி இருந்த போது, 2011 ஆம் ஆண்டு மே மாதம் 2 ஆம் திகதி அமெரிக்கப் படையால் சுட்டுக்கொல்லப்பட்டார்.





இவரது மகன்களில் ஒருவர், ஹம்சா பின்லேடன். இவர் பாகிஸ்தான் – ஆப்கானிஸ்தான் எல்லையில் வைத்து, அமெரிக்காவின் பயங்கரவாதத் தடுப்பு நடவடிக்கையில் கொல்லப்பட்டார் என கடந்த ஜூலை மாத இறுதியில் தகவல்கள் வெளியாகின. இதை அமெரிக்கா உறுதிப்படுத்தவும் இல்லை. மறுக்கவும் இல்லை.

இந்த நிலையில், ஹம்சா பின்லேடன் சாவை அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் உறுதி செய்து ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர், ஹம்சா பின்லேடன் சாவால், அல்கொய்தா அமைப்பு முக்கிய தலைமைத்துவ திறன்களை இழக்கிறது. அத்துடன் அல்கொய்தா அமைப்பின் முக்கிய செயற்பாட்டு நடவடிக்கைகளும் பலவீனம் அடையும் எனக்குறிப்பிட்டுள்ளார்.

# மகளுக்குப் பல்கலை அனுமதி பெற லஞ்சம் கொடுத்த நடிகைக்குச் சிறை



பிரபல ஹொலிவுட் நடிகை பெலிசிட்டி ஹூப்மேன் தனது மகளை பிரபல பல்கலைக்கழகத்தில் சேர்த்து படிக்க வைப்பதற்காக லஞ்சம் கொடுத்தார் என்ற வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டார்.

இதற்காக மகளை இரகசியமாக நுழைவுத்தேர்வு எழுத வைத்து, அதிக மதிப்பெண்கள் தருவதற்காக அதிகாரிகளுக்கு 15 ஆயிரம் டொலர் ( இந்தியப் பணத்தில் சுமார் ரூ.10 லட்சம்) லஞ்சம் கொடுத்தார் எனக் கூறப்படுகின்றது. நடிகை ஹூப்மேன் மீது பொஸ்டன் நகரில் உள்ள நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

கடந்த மே மாதம் வழக்கு விசாரணைக்கு வந்த போது மகள் நுழைவுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறுவதற்காக லஞ்சம் கொடுத்தமையை ஹூப்மேன் ஒப்புக்கொண்டார். அவர் தனது செயலுக்காகக் கண்ணீர் சிந்தியவாறு மன்னிப்பு கேட்டார்.

இந்த வழக்கில் நடிகை ஹூப்மேன் குற்றவாளி என நீதிபதி இந்திரா தல்வானி தீர்ப்பு அளித்தார்.

அவரது தண்டனை விவரம் கடந்த வெள்ளிக்கிழமை அறிவிக்கப்பட்டது. அவருக்கு 2 வாரம் சிறைத்தண்டனை விதித்து நீதிபதி இந்திரா தல்வானி உத்தரவிட்டார். அப்போது அவர் கூறுகையில், தகுதி வாய்ந்த மாணவ, மாணவிகளை ஏமாற்றுவதற்குத் தங்கள் செல்வ வளத்தை பயன்படுத்தக் கூடாது என்ற தகவலை சமூகத்துக்கு விடுக்க வேண்டியது அவசியம். எனவே உங்களை தண்டனை இன்றி விட முடியாது எனக் குறிப்பிட்டார்.

நடிகை ஹூப்மேனுக்கு 30 ஆயிரம் டொலர் (சுமார் ரூ.21 லட்சம்) அபராதமும் விதிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# சவூதியில் உலகின் மிகப் பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை மீது ஆளில்லா பத்து விமானங்களின் மூலம் குண்டுவீச்சுத் தாக்குதல்கள்

## ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கைவரிசை; ஈரான் மீது அமெ. குற்றச்சாட்டு

எண்ணெய் வளமிக்க நாடான சவூதி அரேபியாவில் உலகின் மிகப்பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையின் மீது



ஆளில்லா விமானங்கள் மூலம் கிளர்ச்சியாளர்கள் நடத்திய தொடர் குண்டு வீச்சுத் தாக்குதலில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையும், எண்ணெய் வயலும் தீப்பிடித்து எரிந்தன. வானை எட்டுகின்ற அளவுக்கு தீ கொழுந்து விட்டு எரிந்தது. இந்தத் தீயால், பெரும் கரும்புகை மண்டலமும் உருவானது. நேற்று முன் தினம் அதிகாலை 4 மணிக்கு இந்த ஆளில்லா விமானத் தாக்குதல்கள் நடந்துள்ளன.

சவூதி அராம்கோ என்ற அரசு நிறுவனம், எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளையும், எண்ணெய் வயல்களையும் நடத்தி வருகிறது.

அங்கு, தலைநகர் ரியாத்தில் இருந்து 330 கி.மீ. தொலைவில் புக்யாக் என்ற இடத்தில் உள்ள அப்காய்க் ஆலை, உலகின் மிகப்பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை என்ற பெயரைப் பெற்றுள்ளது.

இந்த ஆலையையும், குராய்ஸ் என்ற இடத்தில் உள்ள எண்ணெய் வயலையும் குறி வைத்து ஆளில்லா விமானத்தாக்குதல்கள் நடைபெற்றன.

இந்தத் தாக்குதல்களால் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையும், எண்ணெய் வயலும் பெருத்த சேதத்துக்கு ஆளாகின. இதை சவூதி அரேபிய உள்துறை அமைச்சகம் உறுதி செய்தது.

இரு இடங்களிலும் நேற்றுத் தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டு விட்டது எனக் கூறப்பட்டது.

தாக்குதல் நடந்த இடங்களில் பத்திரிகையாளர்கள் அனுமதிக்கப்படவில்லை. இதன் காரணமாக தாக்குதலின் பாதிப்புகள் எந்தளவுக்கு இருந்தன என்பது தெரியவரவில்லை.

இந்த தாக்குதல்களை ஏமன் நாட்டைச்சேர்ந்த சவூதி கிளர்ச்சியாளர்கள் நடத்தி உள்ளனர். இது தொடர்பாக அந்த கிளர்ச்சியாளர்களின் அல் மசிராஹ் டெலிவிஷனில் வெளியிட்ட செய்தியில், அப்காய்க் எண்ணெய் சுத்திகரிப்புஆலை, குராய்ஸ் எண்ணெய் வயல் ஆகியவற்றில் கிளர்ச்சியாளர்கள் 10 ஆளில்லா விமானங்களைக் கொண்டு தாக்குதல் நடத்தினர் என கூறப்பட்டது.



ஏமனில் அதிபர் அப்துரப்பா மன்சூர் ஹாதி படையினருக்கும், ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே 2015 ஆம் ஆண்டு முதல் உள்நாட்டுப்போர் நடந்து வருகிறது. இந்தப் போரில் அதிபர் மன்சூர் ஹாதி படையினருக்கு ஆதரவாக சவூதி அரேபிய கூட்டுப் படைகள் களமிறங்கி வான்தாக்குதல்கள் நடத்தி வருகின்றன.



இதற்கு பதிலடி தருகிற விதத்தில் தான் சவூதி அரே பியாவைக் குறி வைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தாக்குதல்களை அடுத்து அங்கு எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.


இதனால் தினமும் 57 லட்சம் பரல் மசகு எண்ணெய் தயாரிப்பு பாதிக்கப்படும் என சவூதியின் ஆற்றல் துறை அமைச்சர் இளவரசர் அப்துலாசிஸ் பின் சல்மான் தெரிவித்துள்ளார். இது சவூதி அரேபியாவின் மொத்த உற்பத்தியில் பாதியளவாகும்.

இந்தத் தாக்குதலுக்கு அமெரிக்க வெளியுறவுச் செயலர் மைக் பாம்பேயோ ஈரான் மீது குற்றஞ்சாட்டியுள்ளார். மேலும் இது ஏமனில் இருந்து நடத்தப்பட்டதாகத் தெரியவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சவூதி அரசு தலைமையில், மேற்கத்திய நாடுகளின் ஆதரவு பெற்ற இராணுவப் படை ஏமன் அரசுக்கு ஆதரவாகச் செயல்படுகிறது. ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு ஈரான் ஆதரவளிக்கிறது.

முன் எப்போதும் இல்லாத அளவுக்கு உலக ஆற்றல் விநியோகம் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது, என பாம்பேயோ தெரிவித்துள்ளார்.

# பிரிட்டிஷ் முன்னாள் பிரதமர் சேர்ச்சில் பயன்படுத்திய தங்க டாய்லெட் அபேஸ்



லண்டன்,செப்.16

இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில் பயன்படுத்திய தங்கத்தால் செய்யப்பட்ட டாய்லெட் கொமட் மாயமானது. பொலிஸார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

லண்டன் வுட்ஸ்டாக் பகுதியில் பெலன்கிம் அரண்மனை உள்ளது. சேர்ச்சில் குடும்பம் வாழ்ந்த அரண்மனை இது. இங்கு வின்ஸ்டன் சேர்ச்சில் பயன்படுத்திய தங்கத்தினால் செய்யப்பட்ட டாய்லெட் கொமட் வைக்கப்பட்டிருந்தது. இதனை திடீரென காணவில்லை. 18 கரட் தங்கத்தால் செய்யப்பட்டது இது. இதன் மதிப்பு பத்து லட்சம் டொலர் (சுமார் 18 கோடி ரூபா) ஆகும்.

பொலிஸார் கூறுகையில் –

இந்தஅருங்காட்சியகத்தில்டாய்லெட் கொமட் வைக்கப்பட்டிருந்த இடத்தில் சேதம் ஏற்பட்டதுடன் தண்ணீரும் கசிவு வெளியே வந்தது. இதனையடுத்து டாய்லெட் திருடப்பட்டதாகக் கண்டு பிடிக்கப்பட்டது. மேலும் பணியாற்றிய ஒருவர் மாயமானார். இவரைக் கைது செய்து விசாரித்து வருகிறோம்.தங்க டாய்லெட் திருட்டு போனதால் அரண்மனையை அடைக்க உத்தரவிட்டுள்ளோம். – என்றனர்.



லண்டனில் தங்க டாய்லெட் திருட்டு போன சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# காகங்கள். பூனைகளின் மூலம் உளவு பார்க்க முயன்ற சி.ஐ.ஏ.

சோவியத் யூனியனுடனான பனிப் போர் காலத்தின்போது, உளவுப் பணிகளில் காகங்கள், புறாக்கள், நாய்கள், பூனைகள் போன்ற உயிரினங்களை ஈடுபடுத்துவது குறித்து அமெரிக்க உளவு அமைப்பு ஆய்வுகள் மேற்கொண்டமை தற்போது தெரிய வந்துள்ளது.

இதுகுறித்து, அண்மையில் வெளியிடப்பட்ட அந்த ஆய்வுகள் குறித்த ஆவணங்கள் தெரிவிப்பவை வருமாறு:–

சோவியத் யூனியனுக்கும், அமெரிக்காவுக்கும் பனிப்போர் உச்சகட்டத்தில் இருந்த போது, சோவியத் யூனியனின் இராணுவ இரகசியங்களை உளவு பார்ப்பதற்காக விலங்குகளையும், பறவைகளையும் பயன்படுத்த அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ. முடிவு செய்தது. அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக பல்வேறு ஆய்வுகளையும் சி.ஐ.ஏ. மேற்கொண்டது.

அதன் ஒரு பகுதியாக, நாயின் உடலில் மின்னணுக் கருவியைப் பொருத்தி, தொலை தூரத்திலிருந்து அந்த நாயை இயக்க முடியுமா என்று சி.ஐ.ஏ. ஆய்வு செய்தது.

மேலும், 60 களில் அமெரிக்காவுக்கு சிம்ம சொப்பனமாக இருந்த சோவியத் யூனியனின் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்களின் கட்டுமானப் பணிகளை வேவு பார்க்க, டொல்பின்களுக்கு சி.ஐ.ஏ. பயிற்சி அளித்தது.

எனினும், அதனை வெற்றிகரமாக செயல்படுத்த முடியவில்லை.

அதுமட்டுமன்றி, சோவியத் யூனியனின் இராணுவ நிலைகளைப் படமெடுக்கவும், ஒட்டுக்கேட்புக் கருவிகளை ஜன்னல் இடுக்குகள்வழியாகப்போடவும்பறவைகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

இதில், ஒரு காகம் மிகச் சிறப்பாக செயல்பட்டதால், சி.ஐ.ஏயின் நோக்கத்தை அது நிறைவேற்றும் என்றுஎதிர்பார்க்கப்பட்டது.ஆனால், ஒருமுறை பயிற்சிக்காகப் பறந்து சென்ற அந்தக் காகத்தை பெரிய பறவைகள் தாக்கியதால் அது திரும்பி வரவேயில்லை.

அத்துடன், தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்காக பல நூற்றாண்டுகளாகப் பயன்படுத்தப்பட்டு வரும் புறாக்களை, சோவியத் யூனியனை வேவு பார்ப்பதற்காக சி.ஐ.ஏ. பயிற்சி அளித்து வந்தது. அதற்காக, அமெரிக்காவிலேயே பல இடங்களுக்குச் சென்று படமெடுத்து வர ஏராளமான புறாக்கள் அனுப்பப்பட்டன. எனினும், அவற்றில் ஒரு சில புறாக்கள் மட்டுமே சரியான முறையில் படமெடுத்திருந்தன; மற்றவை எடுத்த படங்களில் எதுவுமே தெரியவில்லை.

ஏராளமான புறாக்கள் விலையுயர்ந்த கமராவுடன் மாயமாகிப் போகின. ஒரே ஒரு புறா மட்டும் திரும்பி வந்தது; ஆனால், அதனிடம் பொருத்தப்பட்டிருந்த கமராவைக் காணவில்லை. அந்த வகையில், புறா மூலம் வேவுபார்க்கும் திட்டமும் கைவிடப்பட்டது என்று அந்த ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# முல்லைத்தீவிலும் திலீபனின் நினைவேந்தல்









தியாகச்சுடர் திலீபனின் 32 ஆம் ஆண்டு நினைவுநாள் தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் உணர்வெழுச்சியுடன் நேற்று ஆரம்பமானது.

முல்லைத்தீவு - கள்ளப்பாடு வடக்குப் பகுதியிலுள்ள வடக்கு மாகணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரனின் மக்கள் தொடர்பகத்திலும் நினைவேந்தல் நிகழ்வு உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

இந்த அஞ்சலி நிகழ்வில் ரவிகரனுடன் கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சி.லோகேஸ்வரனும் பங்கேற்றார். (ஐ)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை, கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும். நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

DHL

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536

நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி. 076 443 1576

சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576




கசூரினா படகுச் சேவை தொடர்புகளுக்கு: 077 833 9303
077 078 3949, 077 355 7959 Email: kasurina.boat@gmail.com

# யாழ் மத்திய கல்லூரியில் நடைபெற்ற வடமாகாண கைத்தொழில் கண்காட்சி









வடக்கு மாகாண தொழில்துறை திணைக்களம் நடத்தும் கைத்தொழில் கண் காட்சி நேற்றுமுன்தினமும் நேற்றும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

வட மாகாணத்தில் ஒவ்வொரு வருடமும் நடத்தப்படும் இந்தத் தொழில்துறைக் கண்காட்சியில் பல வகையான பாரம்பரிய பொருள்கள் காட்சி படுத்தப்பட் டுள்ளன

இந்தக் கண்காட்சியில் காட்சிப்படுத்தியுள்ள உற் பத்தியாளர்களின் சிறந்த உற்பத்திகளுக்காகத் தெரிவு செய்யப்படுவர்களுக்கு தேசிய மட்டத்திலான சில்பா அபிமானி ஜனாதிபதி விருது வழங்கப்பட இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

மாகாண ரீதியாக வெற்றி பெற்ற உற்பத்தியாளர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

நிகழ்விற்கு வடமாகாண அவைத்தலைவர் சீ.வி. கே.சிவஞானம், யாழ் மாநகர முதல்வர் இமானுவேல் ஆனல்ட், வடக்கு மாகாண அமைச்சின் செயலாளர் ஆர். வரதீஸ்வரன், வடமாகான பேரவை செயலாளர் திருமதி ரூபினி வரதலிங்கம், யாழ் மத்திய கல்லூரி அதிபர் எஸ். கே.எழில்வேந்தன் மற்றும் பல அதிதிகள் வருகை தந்து கண்காட்சியினை திறந்து வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தளராத உறுதியுடன் எழுக தமிழராய் பேரெழுச்சிகொள்க!

## புரட்சித்தமிழன் சத்தியராஜ் அழைப்பு!



தளராத உறுதியுடன் யாழ் முற்றவெளி நோக்கிய எழுக தமிழ் எழுச்சிப் பேரணியில் பங்கேற்று பேரெழுச்சி கொள்க என உங்களுள் ஒருவனாக கேட்டுக்கொள்கிறேன் எனத் தமிழ்த் திரைப்பட நடிகர் புரட்சித் தமிழன் சத்தியராஜ் விடுத்துள்ள காணொலிப் பதிவின் ஊடாக அழைப்புவிடுத்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்;

யாழ் முற்றவெளியில் இன்று திங்கட்கிழமை 16 ஆம் திகதி தமிழினப் படுகொலைக்கு சர்வதேச அரங்கில் நீதி கேட்டு மிகப்பெரும் எழுச்சிப் பேரணி நடைபெறவுள்ளது. தமிழ் உறவுகள் இதில் கலந்து கொண்டு தங்களுடைய ஆதரவுக் கரத்தினை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

நடந்த இனப்படுகொலைக்கு சர்வதேச நீதிமன்றில் இன்னும் நீதி கிடைக்கவில்லை. நாம் தளர்ந்து விடாது போராடிக்கொண்டிருக்க வேண்டும். அப்படிப்பட்ட போராட்டமாகவே யாழ் முற்றவெளியில் தமிழ் மக்கள் பேரவையால் நடத்தப்படவிருக்கிறது. இவ் எழுக தமிழ் நிகழ்வில் தளராத உறுதியுடன் எழுக தமிழராய் பேரெழுச்சி கொள்ளும் வகையில் ஆதரவுக்கரம் நீட்டுமாறு உங்களுள் ஒருவனாக கேட்டுக்கொள்கின்றேன் என எழுக தமிழுக்கு ஆதரவு தெரிவித்து விடுத்துள்ள காணொலிப்பதிவில் புரட்சித் தமிழன் சத்தியராஜ் மேலும் தெரிவித்துள்ளார். (இ

# கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளின் ஆசிரியர்களுடன் சிறிதரன் கலந்துரையாடல்



கிளிநொச்சி மாவட்டத்தின் அமைந்திருக்கும் பாடசாலைகளின் அதிபர்களை சந்தித்துநாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கலந்துரையாடியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தினுடைய பாடசாலைகள் எதிர்நோக்குகின்ற பௌதிக வளத் தேவைகள் சம்பந்தமாகவும் அதிபர்கள் பாடசாலைகளை முன்கொண்டுசெல்வதற்கு ஏற்படுகின்ற வரையறைகள் மட்டுப்பாடுகள் அதை நீக்குவதற்கானவழிவகைகள்தொடர்பாகவும் எதிர்காலத்தில்எவ்வாறானதேவைகளை நிறைவு செய்ய வேண்டும் என்பது தொடர்பாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனுக்கும் கிளிநொச்சி மாவட்ட பாடசாலை அதிபர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரின் அலுவலகத்தில் இடம் பெற்றது.

அதிபர்களின் கருத்துக்களை செவிமடுத்த நாடாளுமன்ற உறுப்பினர் எதிர்காலத்தில் குறிப்பிட்ட இடர்பாடுகளை தன்னால் இயன்ற அளவில் குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்படும் என்றும் மாவட்டத்தினுடைய கல்வியை முன்னகர்த்தி செல்வதற்கு குறித்த அதிபர்களின் பங்களிப்பு கடந்த காலத்தில் எவ்வாறு அளப்பரிய தாக இருந்ததோ அவ்வாறு இனிவரும் காலப் பகுதியிலும் அளப்பரியதாக காணப்படவேண்டும் என்றும் அதன் ஊடாக எமது கிளிநொச்சி மாவட்டத்தை கட்டியெழுப்ப வேண்டும் எனவும் குறிப்பிட்டார்

இக்கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அதிபர்கள் மற்றும் கரைச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்

# இங்கு எதற்கு உப்பளம்?





கிளிநொச்சியின் உருத்திரபுரம் பகுதியின் செருக்கன் பகுதியில் தென்னிலங்கையைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றால் சட்டவிரோதமான முறையில் உப்பளம் அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

தென்னிலங்கையைச் சேர்ந்த நிறுவனம் ஒன்று சட்டவிரோதமான முறையில் உப்பளம் ஒன்று அமைக்கப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கு பொது மக்களால் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் அங்கு சென்றார்.

அந்தப் பகுதியில் அமைக்கப்படும் உப்பளமானது பிரதேச செயலாளர் பிரதேச சபை மற் றும் மாவட்ட செயலாளர் ஆகியோரின் அனுமதி இன்றி அமைக்கப்பட்டு வருகின்றது. இந்த உப்பளம் அந்தப் பகுதியில் அமைக்கப்பட்டு வருவதால் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்கள் பாதிக்கப்படும் நிலையிலும் செருக்கன், பெரிய பரந்தன் சாலம்பன் நீவில் பொறிக் கடவை உருத்திரபுரம் சிவநகர் இன்னும் பல கிராமங்களின் நீர், உவர் நீராகும் நிலையிலும் சுமார் 3000 மக்களின் வாழ்வு பாதிக்கப்படும் நிலையிலும் உள்ளது. ஏற்கனவே கிளிநொச்சியில் ஆனையிறவு சர்வதேச தரத்தில் வெள்ளை உப்பிற்கு பெயர்பெற்ற குறிஞ்சா தீவு உப்பளம் போன்றவை உள்ள நிலையில் இந்த உப்பளம் இந்தப் பகுதிக்கு தேவையற்ற வகையில் அமைக்கப்பட்டு வருகிறது.

இந்த விடயம் தொடர்பாக அங்கு வேலை செய்யும் மக்களிடம் வினாவியபோது குறித்த வேலைகள் ஆரம்பிக்கப்படும் முன்பு யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் குறித்த நிறுவனத்தின் தலைவர்களுடன் வருகை தந்து கிராமத்தில் கூட்டம் ஒன்றை நடத்தினார் என்றும் அந்த கூட்டத்தில் 35 பேருக்கு வேலைவாய்ப்பு தருவதாகவும் தமக்கு வழங்கிய வாக்குறுதியின் படியே தாங்கள் வந்து வேலை செய்கின்றனர் எனவும் குறிப்பிட்டனர். கிராம மக்களின் முறைப்பாட்டை அடுத்து நாடாளுமன்ற உறுப்பினர், அந்த கிராம மக்கள் ஆகியோருடன் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதனும் கலந்து கொண்டார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.09.2019 இல் வெளியிடப்பெற்றது.